உலக வரலாற்றில் முதன்முறையாக இ-மெயிலில் வெளிவரும் இதழ்

e-magazine

www.aanmeegamalar.com

# ஆன்மிகமலர்

ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!!

மெயில் புக்

மலர்-7 இதழ்-178

ஜூன் 16-30 2024



வெளிநாட்டு வேலை கிடைக்க அருள்தரும் திருமால்பாடி

பரதனை புரிந்து கொண்ட குகன் படைவீரர்கள்

## காயங்கள் தீர மருந்து தடவி சயனகோலத்தில் காட்சிதரும் அனுமன்

## முகலாயர்களை பின்வாங்க வைத்த அதிசயம்

e-magazine
e-magazine
e-magazine

# சிவராத்திரி சித்தர்




திருவண்ணாமலையில் ஒரு மாத சிவராத்திரி அன்று வேடனால் அடிபட்ட மான் ஒன்று தப்பி ஓடி வந்து ஒரு மடத்திற்குள் புகுந்து படுத்துக் கொண்டது. அதன் உடலில் இரத்தம் வெளியேற, மரணிக்கும் தருவாயில் இருந்தது. அன்று அந்நாட்டு மன்னன் அன்னதானம் ஒன்றுக்கு ஏற்பாடு செய்ய, உணவு வகைகள் தயாராகிக் கொண்டு இருந்தன. கவலைக்கு இடமான மானின் நிலையை அறிந்த மன்னன் மான் இறந்துபோனால் அன்னதானம் பங்கப்படுமே என்று மடத்திலிருந்த சித்தர் ஒருவரிடம் தன் கவலையைத் தெரிவித்தான். "கவலை வேண்டாம் மன்னரே!" எனக்கூறி விட்டு, மடத்தின் அருகிலேயே

மறைவான ஓரிடத்தில் படத்துக் கொண்டு, உயிருக்குப் போராடும் மானின் உடலில் தன் ஆத்மாவை செலுத்தினார். உடனே மான் துள்ளி எழுந்து மடத்தை விட்டு வெளியே ஓடி, சித்தர் படுத்துக்கொண்டு இருந்த இடத்திற்கு அருகே சென்று படுத்து உயிரை விட்டது. சித்தரும் தன் ஆத்மாவை மானின் உடலில் இருந்து வெளியேற்றி தன் உடலில் செலுத்தி எழுந்து கொண்டார். அன்னதானம் மிகச் சிறப்பாக நடைபெற்றது. மனம் மகிழ்ந்த மன்னன் சித்தரின் காலில் விழுந்து வணங்கி ஆசி பெற்றான். மடத்திற்காக நிலங்களையும் பசுக்களையும் வணங்கினான். அடுத்த சிவராத்திரி அன்று முக்தி அடைந்தார் அந்த சித்தர். இந்தக் காரணத்தால் சிவராத்திரி சித்தர் என அவர் போற்றப்பட்டார். ஒவ்வொரு சிவராத்திரி அன்றும் இவர் சூட்சும உடலில் திருவண்ணாமலை கிரி வலம் செய்வதாக மக்கள் நம்புகின்றனர்.

# குழந்தைகளின் படிப்புக்கு உதவும் வழிமுறை




குழந்தைகளுக்கு விளையாட்டில் மட்டும் ஆர்வமிருந்து, படிப்பில் ஆர்வமில்லாமல் இருந்தாலும், குழந்தைகள் வாயில் அமங்களமான வார்த்தைகள் அதிகமாக வந்தாலும், அவர்களுக்கு சனி பகவான், மற்றும் ராகு – கேது போன்ற கிரகங் களே காரணமாக இருக்கும்.

இப்படிப்பட்ட சூழலில் அக்குழந் தைகளை மேற் கண்ட கிரகங் களில் இருந்து காத்து அவர்களை நல்வழிப் படுத்த வேண்டுமென் றால், படிக்க முடியாமல் ஏழ்மைநிலையில் உள்ள குழந்தைகளுக்கு, அவர்களின் படிப்புக்கு தேவையான உதவிகளை உங்கள் குழந்தைகள் மூலமாக செய்துவாருங்கள்.

இதுபோன்ற ஏழைகுழந்தைகளின் படிப்புக்கு செய்யும் உதவிக்கு கட்டுப்பட்டு, சனி, ராகு, கேது போன்றோரின் செயல்பாடுகளில் தீமை குறைந்து உங்கள் குழந்தைகளுக்கு படிப்பின் மீது ஆர்வம் ஏற்படுவதை கண்கூடாக பார்க்கலாம்.

e-magazine
aanmeegamalar.com



# காவல் தெய்வம்

காவல் தெய்வங்கள் ஊர் எல்லையில் அல்லது ஏதேனும் ஒரு வயல்மேட்டில் அமைந்திருக்கும். காவல் தெய்வத்தை, எல்லைக் கடவுள் என்றும் சொல்வது உண்டு. வேலைக்கு செல்லும் போதோ, ஒரு பணியின் நிமிர்த்தமாக வெளியே செல்லும் போதோ காவல் தெய்வங்களை வணங்கிவிட்டு செல்வது வழக்கம். அல்லது காவல் தெய்வம் இருக்கும் திசையை நோக்கியாவது ஒரு கற்பூரத்தை ஏற்றி வணங்கிவிட்டு செல்வது வழக்கம்.

நீண்டதூர பயணம் போகும் முன், வாகனத்தின் முன் சக்கரங்களில் இரண்டு எலுமிச்சை பழங்களை வைத்து நசுக்கிவிட்டு காவல் தெய்வங்களை வணங்கிவிட்டு செல்கிறோம். ஏனென்றால், காவல் தெய்வம் நமக்கு துணையாக இருந்து நம்மை காக்கும். காவல் தெய்வங்களில் இரண்டு வகைகள் உண்டு.

1. தலைமை தெய்வத்திற்கு காவலாக இருப்பது.
2. ஊரினையும், நிலங்களையும், நீர்நிலைகளையும் காவல் காக்கும் தெய்வம்.

பெரும்பாலான கிராமப்புற பகுதிகளில் ஏரி, குளங்கள், வயல்வெளிகள் இவற்றிற்கு காவல் தெய்வங்களாக ஐயனார் தெய்வங்கள் இருப்பதை காணலாம். இத்தெய்வம் வயல்களில் உறைந்து வயல்களின் வளமைக்கு துணைபுரிவதாக மக்கள் நம்புகின்றனர். பெரும்பாலான ஊர்களில் ஐயனார், கருப்பராயன் போன்ற தெய்வங்கள் ஊரை காப்பதாக நம்பப்படுகிறது.

திருட்டு, நோய், வெள்ளம், புயற்காற்று முதலிய இயற்கை சீற்றங்களில் இருந்து இத்தெய்வம் காப்பதாக நம்பப்படுகிறது. பல ஊர்களில் முனியப்பன் கோயில் தலைமை தெய்வத்தின் காவல் தெய்வமாக கருதப்படுகிறது. கருப்பராயன் கோயில்களில் பரிவார தெய்வங்களாக அதாவது காவல் தெய்வங்களாக முனிகளே இருக்கின்றன.

ஊர்களில் காவல் தெய்வங்கள்குடிகொண்டதற்கு ஏதேனும் ஓர் பூர்வீக கதை இருக்கும். அந்த கதையை பார்த்தால், யாரேனும் ஒரு நபர் (ஆண் அல்லது பெண்) வஞ்சிக்கப்பட்டு இருக்கலாம். அல்லது துன்புறுத்தப்பட்டு இருக் கலாம். பின்னாளில் அந்த நபரோ அல்லது குடும்பமோ தெய்வமாகி வணங்கப்படும் வழக்கம் வந்திருக்கலாம். கிராமப்புறங்களில் குடிகொண்டுள்ள காவல் தெய்வங்களுக்கு பெரும்பாலும் விசேஷங்கள் எதுவும் விமர்சையாக இருக்காது. அதேநேரம் விசேஷ தினங்கள், திருவிழாக்காலம் என்றால், காவல் தெய்வங்களுக்கு விதவிதமான படையல்கள், அபிஷேக ஆராதனைகள், வேண்டுதல் நிறைவேற்றுவது என அந்த இடமே கோலாகலமாக இருக்கும்.

பெரும்பாலானவர்களுக்கு மாரியம்மன் காவல் தெய்வமாக இருக்கக்கூடும். அதுமட்டுமின்றி, அனைத்து கிராமப்புற ஊர்களிலும் மாரியம்மன் கோவில் இருப்பதை நாம் காணலாம். தாயாக இருந்து காப்பதில் மாரியம்மனுக்கு ஈடு இணை கிடையாது.

காவல் தெய்வங்கள் மனிதனாக இருந்து தெய்வமாக குடிகொண்டு அருள்பாலித்து வருவதால், ஒரு குடும்பத்தில் ஏற்படும் கஷ்ட நஷ்டங்கள் பற்றி நன்றாக தெரியும். தன்னை தேடி வருபவர்களை, சின்ன சின்ன தவறுகள் செய்தாலும், அவற்றை பொறுத்து அவர்களை கைதூக்கி விடுகின்றன. காவல் தெய்வங்களாக இருக்கும் முனீஸ்வரன், ஐயனார் போன்ற தெய்வங்கள் சிலருக்கு குலதெய்வங்களாக இருக்கலாம். காவல் தெய்வத்தின் பரிபூரண ஆசீர்வாதம் நமக்கு கிடைக்க வேண்டுமென்றால், குலதெய்வ வழிபாட்டை நாம் தொடர்ந்து மேற்கொண்டு வர வேண்டும். அப்போதுதான் காவல் தெய்வம் நம்மை காப்பாற்றும்.

– எம்.அசோக்ராஜா, அரவக்குறிச்சிப்பட்டி,
செல்: 9750333265.

e-magazine
aanmeegamalar.com

# பிரிந்த தம்பதி ஒன்றுசேரவும், மகாலட்சுமி தரும் செல்வத்தை தக்கவைக்கவும் அருள்புரியும்



# தூமாவதி

பராசக்தியின் தசமஹா வித்தையின் 10 அவதாரங்களில் தூமாவதி அவதாரம் ஒன்றாகும். இது மஹாவிஷ்ணுவின் தசவதாரங்களில் மத்ஸ்ய அவதாரத்திற்கு இணையாகவும் நவகிரகங்களில் கேது பகவானின் தோஷத்தை நீக்கும் சக்தி கொண்டவள் தூமவதி தேவி.

இந்த தேவியினை வழிபாடு செய்தால் பிரிந்த தம்பதிகள் ஒன்று சேருவர். தகாத உறவுகள், கெட்ட பழக்கங்கள், தீய சக்திகள், தீய எண்ணங்கள் நீக்கி நல் வழிப்படுத்துவாள்.

தேவி பாகவத புராணத்தில், சாகம்பரி தேவியின் யுத்தத்தில் உதவியவர்களில் ஒருத்தியாக தூமாவதியைக் குறிப்பிடுகின்றது.

"சக்தி சங்கம தந்திரம்" நூல், தாட்சாயிணி வேள்விக்குண்டத்தில் பாய்ந்து உயிர்நீத்த பின், அவளது எரியும் சடலத்தின் புகையிலிருந்து கருநிறத்துடன் இவள் உதித்தாகச் சொல்கின்றது. அடங்காப்பசியுடன் தன் கணவன் சிவனையே தின்று, அவள் விதவையானதாக "பிராணதோஷினி தந்திரத்தில்", ஒரு கதை உண்டு. இன்னொரு வரலாற்றில், சும்ப நிசும்பரை அழித்த போது, துர்க்கையின் படையில் தோன்றி, புகை மூலம் தூமாவதி, அசுரர்களை மயக்கி அழித்ததாகச் சொல்லப்படுகின்றது.

தூமாவதி தந்திரமானது, அன்னை தூமாவதியை, வயதான அசிங்கமான கைம்பெண்ணாக வருணிக்கின்றது. மெல்லிய, உயரமான நோய்பீடித்தவளாக கானப்படும் அவள், மிகக் கொடியவள். கலைந்த கூந்தலும் அழுக்காடைகளுமே அவளது அலங்காரங்கள். பல்லுதிர்ந்து போனவளாக, ஒருகையில் முறமும், மறுகையில் அஞ்சேல் முத்திரையும் தாங்கி அவள் அமர்ந்திருப்பாள். காகத்தால் இழுக்கப்படும் தேரில் வலம் வருபவளாகவும், அடங்காப் பசியும் கொண்டவளாக குறிப்பிடுகின்றன.

“பிரபஞ்ச சராசர சங்கிரகம்’’ நூலின் படி, கருநிறத்தவளான தூமாவதி, பாம்பணிந்து காணப் படுவாள். கத்தியும் கபாலமும் அவள் கைகளில் துலங்க, துடைப்பமும் முறமும் விளக்கும் தண்ட மும் தாங்கியவளாக, பிச்சைக்காரி போல் ஆடை யுடுத்து, அச்சமூட்டும் கூரிய கண்களுடன் காட்சி தருவாள்.

எலும்புகளைக் கடிக்கும் அச்சமூட்டும் ஒலி, அவள் வாயிலிருந்து எழுந்து கொண்டிருப்பதாக, “சாக்தப் பிரமோதம்“ நூல் துதிக்கின்றது. அசுரப் பிணங்களை இரசித்துண்பவளாகவும், குருதி விடாய் கொண்டவளாகவும் அவள் போற்றப் படுகிறாள்.

கைம்பெண்கள், அமங்கலத்தையும் கெட்ட சகுனமாக குறிக்கும் இந்தியப் பண்பாட்டில், தெய்வீகக் கைம்பெண்ணான தூமாவதி, அச்ச மூட்டுபவளாக வலம்வருகிறாள். ஏழைகள், பசித் தோர், நோயாளிகள், வறுமை, அழிந்த ஊர்கள், வனாந்தரங்கள், பாலைவனங்கள் அனைத்தையும் ஆளும் கட்டற்ற தெய்வமாக விளங்குகிறாள்.

கைம்பெண்ணாயினும், எழிலோடு விளங்குபவளாக, காமரூபிணியாக பிற்காலச் சித்தரிப்புக்களில் அவள் கூறப்படுகிறாள்.

போதையில் வழிபடப்படும் தேவதையாகவும், மது, மாமிசம், மச்சம், மைதுனம், தானியம் சேர்த்த “பஞ்சமகார பூசை” மூலம் திருப்திப்படுத்த வேண்டியவளாகவும் அன்னை தூமாவதி சொல் லப்படுகின்றாள். சிவனே மறைந்த பின்னும் எஞ்சுபவள் இவ ளென்றும் காலத்தைக் கடந்தவள் என்றும் தூமாவதி போற்றப்படுகின்றாள்.






பிரபஞ்சம் எரிந்தழிந்த பின் எஞ்சும் பெரும்புகையே தூமாவதி. கொடிய வளாயினும் இளகிய மனம் படைத்தவள். பெண் களால் சூழப்பட்டவள்.

மூதாட்டியாக சிறுவர்களுக்கு பேரறிவை வழங் கும் குருவும் அவள். தீமையில் விளைகின்ற, அல்லது தீமையின் முடிவைக் கட்டியம் கூறுகின்ற நன்மையை, அவள் குறிப்பால் உணர்த்து பவளாகவும், தூமாவதி தேவியை வழிபட நல்ல ஞானம் புத்தி உண்டாகும்.

இத்தேவியை உபாசிப்பதால் சத்ரு நாசம் உண் டாகும், நல்ல பண்புகள், நல்ல ஞானம் கிட்டும். கஷ்டங்கள், வியாதிகளிலிருந்து விடுபடலாம். சகல காரிய சித்தி, நல்லறிவு பெற தூமாவதி உபாசனை வழிவகுக்கிறது.இவள் 64 விதமான தரித்திரங்களை நாசம் செய்பவள். மஹாலக்ஷ்மி நமக்கு அளிக்கும் செல்வத்தை காப்பாற்றி கொடுக்கும் சக்தி படைத்தவள்.

சூர்ய அஸ்தமனத்திற்கு பிறகு வீட்டில் பூஜை அறையில் தூபம் போட்டு இந்த தேவியை வழிபட வேண்டும். வீட்டில் உள்ள துர்சக்திகள் எதிர்மறை எண்ணங்கள் விலகி நன்மையும் மகிழ்ச்சியும் உண்டாகும்.

e-magazine
aanmeegamalar.com

# காயங்கள் தீர மருந்து தடவி சயனகோலத்தில் காட்சிதரும் அனுமன்



## முகலாயர்களை பின்வாங்க வைத்த அதிசயம்

மகாவிஷ்ணு சயன கோலத்தை பார்த்திருப்போம், ஸ்ரீரங்கம் முதற்கொண்டு சிதம்பரம் நடராஜர் சன்னதியில் பெருமாள் சன்னதியில் வீற்றிருக்கும் பெருமாள் வரை பல்வேறு திருத்தலங்களில் சயனக் கோலத்திலி பார்த்திருப்போம், அதேபோன்று சிவபெருமானும் சயனக் கோலத்தில் சுருட்டப்பள்ளியில் பார்த்திருப்போம்.

அந்தவகையில் ராம மந்திரத்தை உச்சரித்து எப்போதும் உற்சாகமாக காட்சி தரும் அனுமன் சயன கோலத்தில் பார்த்திருப்பது அரிது.

ஆனால் அனுமன் சயனக் கோலத்தில்உள்ள திருத்தலமும் இந்தியாவில் உள்ளது. இத்தலம் மிகவும் பழமையானதாகவும் மிகவும் பிரமிப்புக் குரிய நிகழ்வுகளை கொண்ட ஸ்தலமாக திகழ்ந்து வருகிறது.

உத்தரபிரதேச மாநிலம் பிரயாக்ராஜ் மாவட்டத்தில் அலகாபாத் கோட்டைக்கு வடக்கே சுமார் 500 மீ தொலைவில் திரிவேணி சங்கமத்திற்கு அருகில் அமைந்துள்ளது படே ஹனுமான் என்று அழைக்கப்படும் லெதே ஹனுமான் சன்னதி.

ஆன்மிகமலர்
ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!! .காம்





ஆன்மிகமலர்
மெயில் புக்

இந்த பிரம்மாண்டமான ஹனுமான் சிலை பிரயாகில் உள்ள பழமையான ஒன்றாகும். படே ஹனுமான் பிரயாக்ராஜின் கோட்வால் என்று அழைக்கப்படுகிறார், அதாவது பிரக்யாக்ராஜன் பாதுகாவலர் என்று பொருள்.

இராமாயணத்தில் இராமனின் வலதுகரமாக இருந்த அனுமன், ராமர், சீதாவுடன் இலங்கையிலிருந்து வெற்றி பெற்றுத் திரும்பிய பிறகு, போரில் பல காயங்களுக்கு ஆளாகி கடுமையான வேதனையும் சோர்வும் அடைந்திருந்தார் ஹனுமான்.

அனுமனின் நிலையைக் கண்டு மனம் வருந்திய சீதாதேவி அவர் மீது இரக்கம் கொண்டு, அவரின் உடல் வலியும், காயமும் போக்கும் வகையில் மருந்து தயாரித்து கொடுத்து, அதை உடலில் பூசிக்கொண்டு, பிரயாகில் ஓய்வெடுக்கும்படி கூறினார்.

அதை பெற்று கொண்ட அனுமன், சீதாதேவியின் கட்டளைப்படி அம்மருந்துகளை உடல் காயங்கள் மீது பூசிக் கொண்டு, கண்களைத் திறந்த நிலையில் படுத்திருக்கிறார்.

இக்கோவிலில் வீற்றிருக்கும் சயன கோல அனுமன் 20 அடி நீளமும், 6 முதல் 7 அடி ஆகலமும் கொண்டவராக திகழ்கிறார். அவரது இடது பாதத்திற்கு கீழே காமதா தேவியும், வலது பாதத்திற்கு கீழே அஹிராவணனும் அமர்ந்திருப்பதாக நம்பப்படுகிறது.

ராமனும், லக்ஷ்மணனும் அவரது வலது கரத்திலும், அவரது கதாயுதம் இடது கரத்திலும் உள்ளனர். இந்த கோவில் மிகப் பழமையானது என்று கூறப்படுகிறது.

இந்தக் கோவிலைப் பற்றியும், இங்குள்ள அனுமனைப் பற்றியும் பல்வேறு கதைகள் கூறப்படுகிறது.

உள்ளூர்வாசிகளின் கூற்றுப்படி, கன்னௌஜ் நகரைச் சேர்ந்த ஒரு செழிப்பான வணிகர், அபரிமிதமான செல்வம் மற்றும் செல்வத்துடன் வாழ்ந்து வந்ததாகவும், தனக்கு வாரிசு இல்லாததால் தனது தலைமுறை தன்னுடன் முடியவிருப்பதை எண்ணி வருத்தப்பட்டார்.

அவர் விந்தியாச்சல மலைகளுக்குச் சென்று, ஹனுமானிடம் தனது வேண்டுதலை வைத்து குழந்தை வரம் பெற நினைத்தார்.

அந்த வணிகர் மலைகளில் ஒரு ஈர்க்கக்கூடிய பாறையில் சிலையை வடிவமைத்து அதை தான் கட்டவிருக்கும் கோவிலுக்கு எடுத்து செல்ல முயற்சி செய்தார்.

எப்போதும் அனுமன் நாமம் கூறியபடியே தனது பணிகளை செய்யும் வணிகர் இரவில் ஆழ்ந்த உறக்கத்தின் போது, சிலையை இங்கே விட்டுச் சென்றால், தங்களின் விருப்பங்கள் நிறைவேறும் என்று யரோ கூறுவது போல உணர்ந்தார்.

இது அனுமனின் கட்டளை என்று எண்ணி வியாபாரி ஹனுமானை கங்கை மற்றும் யமுனை பாயும் இந்த இடத்தில் விட்டுவிட்டு தனது ஊரான கன்னௌஜ் திரும்பினார். கனவில் கூறிய அசரிரியின் வாக்குப்படி அவர் ஒரு மகனைப் பெற்றார்.

இருப்பினும், காலப்போக்கில், கங்கை மற்றும் யமுனை நதிகளின் அரிப்பு காரணமாக, ஹனுமான் சிலை தண்ணீரில் மூழ்கி சில ஆண்டுகளாக அப்படியே இருந்தது.

மக நட்சத்திரத்தில் சங்கமத்தில் நீராட வந்த ஒரு சாது தன் திரிசூலத்தை மணலில் அழுத்தி நதியில் இறங்க முற்பட்டபோது, கீழே ஏதோ கடினமாக இருப்பதைக் கண்டார்.

அதைச் சுற்றியிருந்த மணலை மெதுவாக அகற்றிப் பார்த்தபோது, ஹனுமான் சிலையைக் கண்டுபிடித்தார். முதல் பார்வையிலேயே அந்தச் சிலை மிகவும் பழமையும், சக்தியும் கொண்டது என்பது தெளிவாகத் தெரிந்தது. இதனால் இங்கு ஒரு கோவில் கட்டப்பட்டது, அக்கோவிலில் பல்வேறு சிலைகள் பிரதிஷ்டை செய்யப்பட்டது



e-magazine
aanmeegamalar.com





கங்கை நீர் சூழும் அனுமன் சன்னதி

என்று ஒரு சாரார் கூறுகின்றனர்.

இன்னொரு பிரிவினர்,

இந்த சிலையை பிரயாகைக்கு கொண்டு வந்தது ஒரு வணிகர் அல்ல என்றும் ஒரு அரசன் என்றும் உள்ளூர்வாசிகள் சிலர் கூறுகிறார்கள்.

அனுமன் சிலையை நதியின் மூலமாக ஒரு அரசன் தனது நாட்டிற்கு எடுத்து செல்லும்போது துரதிர்ஷ்டவசமாக, அவரது படகு மூழ்கியது, அதில் இருந்த ஹனுமான் சிலை பல நூறு ஆண்டுக்கணக்கில் தண்ணீருக்கு அடியில் இருந்தது, இதை கண்டுபிடித்து பக்தர்கள் கோவில் எழுப்பினர் என்றும் கூறப்படுகிறது.

மேலும் இந்த அனுமனை அகற்ற இஸ்லாமிய படையெடுப்புவாதிகள் முற்பட்டதாகவும், ஆனால் அவர்களால் அது முடியாமல் போனதால் விட்டுவிட்டு சென்றதாகவும் கூறப்படுகிறது.

இஸ்லாமிய ஆக்கிரமிப்பின் போது, இந்தியர் கள் அவர்களை எதிர்த்து கிளர்ச்சி செய்தனர், அந்த வகையில் மகத், அவாத் மற்றும் மத்திய பாரதத்தில் கிளர்ச்சிகளை அடக்குவதற்கு பிரயா கையை ஒரு முக்கியமான ராணுவப் புறக்காவல் நிலையமாக மாற்ற அக்பர் விரும்பினார் என்றும் கூறப்படுகிறது.

அவர் அலகாபாத் கோட்டையை கட்டினார் மற்றும் படே ஹனு மான் ஜியை கோட்டைக்குள் நகர்த்த முயன்றார் ஆனால் தோல்வியடைந் தார். எவ்வளவோ முயற்சி செய்தும், அக்பர் கட்டிய கோட்டைக்குள் ஹனு மன் சிலையை நகர்த்த முடியாத தோல்வி அவருக்கு மிகப்பெரிய அவமானமாகவே இருந்தது.

படே ஹனுமானின் ஆன்மீக ஆற்றலைக் கேட்ட ஔரங்கசீப் சிலையை அகற்றி கங்கையில் வீச தனது படையை அனுப்பி வைத் தான்.

ஔரங்கசீப்பின் படைபிரிவினர் ஒவ்வொரு முறையும் அனுமனை தூக்கிச் செல்ல முயலும் போது, அவர் இன்னும் ஆழத்தில் மூழ்குவார்! பல்வேறு படை வீரர் குழுக்கள் முயற்சி செய்தும் அனுமனை நகர்த்த முடியாத இயலாமையால், வெறுத்துப்போன ஔரங்கசீப், தனது படை வீரர்களை அக் கோயிலை விட்டு வெளியேற உத்தரவிட்டதாகவும் கூறப்படுகிறது.

இந்த அனுமன் கோவிலில் இன்னும் ஒரு சிறப்பு உள்ளது, மழைக்காலத்தில் கங்கையின் நீர்மட்டம் உயர்ந்து இக்கோயிலுக்குள் பாய்கிறது.

இவ்வாறு கங்கை நீர் கோவிலுக்குள் புகுந்து அனுமன் விக்கிரகத்தின் மீது படுவதை மங்களகரமான நிகழ்வாகக் கருதுகிறார்கள் ஊர் மக்கள்.

**ஹனுமான் கங்கை நீரில் ஒரு முறை நீராடினால் அந்த வருடம் எந்த பேரழிவும் ஏற்படாது என்ற நம்பிக்கையும் இக் கோவிலில் இன்றுவரை கூறப்பட்டு வருகிறது.**

– கீதாராஜன், சென்னை
போன்: 9444228203



கோவிலை தேடி வரும் கங்கை நீர்

e-magazine
aanmeegamalar.com

# நம்ம ஊரு கோவில்

உங்கள் ஊரில் உள்ள கோவில்களைப்பற்றிய தகவல்களையும், சிறப்புகளையும் e-mail, WhatsApp வா யிலாக டைப் செய்து அனுப்புங்கள்.


**நமது இதழ் மூலம் மற்றவர்களுக்கு தெரியப்படுத்துங்கள்....**

பழமையான கோவில்கள், கிராமத்து கோவில் பற்றிய விவரங்களையும், வழிபாட்டு முறைகளையும் மற்றவர்கள் அறிந்து கொள்ள ஆன்மிக அன்பர்கள் வரவேற்கப்படுகின்றனர்.

தொடர்பு எண்: 9444228203

இ–மெயில் முகவரி:

aanmeegamalar@gmail.com



GET IT ON Google Play



# சொந்த வீடு வாங்கவும் கட்டிய வீட்டின் வாஸ்து பிரச்சனைகளை நீக்கும்

# மண்ணச்சநல்லூர் பூமிநாதர் திருக்கோவில்

சொந்த வீடு வாங்க வேண்டும் என்ற கனவு யாருக்குத் தான் இருக்காது? அந்த கனவு நிறைவேற இந்த திருக்கோவில் துணை புரியும் என்று சொன்னால் நம்பமுடிகிறதா?


விரைவில் சொந்த வீடு வாங்க, புதிய வீடு கட்டுமான தொடங்கியதும் வாஸ்து குறைகளால் ஏற்படும் தடங்கல், நிலம், மனை விற்பதில் தடை, பூர்வீக சொத்து வழக்கு பிரச்சனை நிழுவையில் உள்ளது போன்ற பிரச்சனைகளை தீர்க்க செல்ல வேண்டிய கோவில், மிகவும் சக்தி வாய்ந்த வாஸ்து கோவிலைப்பற்றித்தான் இந்த பதிவில் காண உள்ளோம்.

திருச்சி மாவட்டத்தில் உள்ள மண்ணச்சநல்லூரில் அமைந்திருக்கும் பூமிநாதர் திருக்கோவில்தான் அந்த சக்தி வாய்ந்த பரிகாரஸ்தலம்.

பூமியில் உள்ள 16 வகை பிரச்சனைகளை நிவர்த்தி செய்யக்கூடிய கோவில் என்று அகத்தியர் ஓலைச்சுவடியில் இந்த கோவிலைப் பற்றி எழுதியுள்ளார்.

வாஸ்து பிரச்சனை, சொத்து பிரச்சனை, நிலப்பிரச்சனை, வழக்கு நிழுவை போன்றவற்றை சரி செய்யும். எந்த இடம் பிரச்சனையில் உள்ளதோ அந்த இடத்தில் உள்ள வடகிழக்கு மூலையில் உள்ள மண்ணை 3 கைப்பிடி ஒரு மஞ்சள் துணியில் வைத்து எடுத்து வந்து சாமியிடம் பூஜை செய்து திருப்பி எடுத்து வந்து பூஜையறையில் வைத்து விட வேண்டும். பூஜை செய்த அடுத்த 5





நாளைக்குள் எடுத்த இடத்தில் அந்த மண்ணை போட்டுவிட வேண்டும். எலுமிச்சை பழத்தை குங்குமம் தடவி அந்த இடத்தில் பிழிந்துவிட்டு வைத்து புதைத்துவிட வேண்டும். பின்பு சூடம் ஏற்றி வேண்டிக்கொண்டு வீட்டிற்கு வந்து மஞ்சள் துணியில் 5 ரூபாயை முடிந்து வைத்துவிட வேண்டும். நாம் மனதில் நினைத்த காரியம் 3 முதல் 5 மாதத்திற்குள் நிறைவேறிவிடும். நினைத்தது நடந்த பிறகு 5 ரூபாயை எடுத்து வந்து இங்கே அபிஷேகம் செய்ய வேண்டும்.

இக்கோவில் பூமியில் உள்ள எல்லா பிரச்சனைகளையும் நிவர்த்தி செய்யும் என்று அகத்தியர் கூறியுள்ளார். இங்கே வன்னி மரம், வில்வ மரம் என்று இரண்டு தலவிருட்சம் உள்ளது. இறைவனின் பெயர் பூமிநாதர். இங்குள்ள அம்பாளின் பெயர் தர்மசம்வர்த்தினி. அதனால் தர்மமான முறையில் கோரிக்கைகள் வைக்க வேண்டும்.

இங்குள்ள நவகிரகங்களில் எல்லா கிரகங்களும் சூரியனை நோக்கியிருக்கும், சூரியன் சனியை நோக்கியிருக்கும்.* இங்கே ராகு, கேது சர்ப்பமாக இல்லாமல் முழுமையாக இருக்கிறார்கள். சொத்து பிரச்சனை, மண் சம்மந்தமாக இருக்கும் பயம் போன்றவற்றை போக்குவார். சொத்து சேரவேண்டும் என்ற வேண்டுதலையும் நிறைவேற்றி வைப்பார்.

இக்கோவில் புராணத்தை பார்க்கலாம். அந்தகன் என்னும் அசுரன் தேவலோகத்திற்கு சென்று அங்குள்ள தேவர்களுக்கெல்லாம் தொல்லை கொடுத்து கொண்டிருந்தான். இதனால் தேவர்களை இதைப்பற்றி சிவபெருமானிடம் முறையிட்டனர். சிவனும் அந்தகாசுரனை சூலத்தால் கொன்று அழித்தார். அப்போது ஈசனின் நெற்றியிலிருந்து ஒரு துளி வியர்வை பூமியில் விழுந்தது. அதிலிருந்து பூதம் கிளம்பியது. பூதம் ஈசனை நோக்கி தவமிருந்தது. ஈசனும் அதன் முன்பு தோன்றி வேண்டிய வரம் கேள் என்றார். மூன்று உலகையும் எரித்து அழிக்கும் திறன் வேண்டும் என்று கேட்டது. ஈசனும் அந்த வரத்தை கொடுத்தார். இதனால் பூதம் பூமியை



விழுங்க முற்பட தேவர்கள் அதை தடுத்து குப்புற கவிழ்த்தி அழுத்தி பிடித்துகொண்டனர். எனக்கு பசிக்கிறது உணவளியுங்கள் என்று பூதம் கேட்டது. எனவே தேவர்கள் பூமியில் வீடு கட்டும்போது படைக்கும் அனைத்தும் உனக்கு வந்து சேரட்டும் என்றனர்.

அதுமட்டுமில்லாமல் குறிப்பிட்ட நாளில் 1 லு நாழிகையே உனக்கு எழுவதற்கு அனுமதியுண்டு. பூலோக வாசிகள் வீடு கட்டும் உணவுகள் உன்னை வந்து சேர்வதால் உனக்கு வாஸ்து புருஷன் என்று பெயரிடுகிறோம் என்று கூறினர். இந்த இடத்தில் சிவபெருமானுக்கு கோவில் கட்டியதால் அவருக்கு பூமிநாதன் என்ற பெயரும் வந்தது. *இங்கே சிவன் வாஸ்து கடவுளாக வீற்றிருந்து அருள்பாலிக்கிறார். எனவே இக்கோவிலுக்கு ஒருமுறையாவது சென்று இறைவனை வழிபடுவது சிறப்பாகும்* .

– எம்.அசோக்ராஜா,
அரவக்குறிச்சிப்பட்டி,
செல்: 9750333265.

e-magazine
aanmeegamalar.com

# ஆயிரம் ராமர்களுக்கு சமமான பரதனை புரிந்து கொண்ட குகன் படைவீரர்கள்

e-magazine
aanmeegamalar.com

ஒருவனை ஊர் உலகம் புரிந்துகொள்ள முடியாமல் போனால் பெரிய பாதிப்பு வந்து விடாது.

ஆனால் அவனுடைய குடும்பத்தினர், உற்றார் கூட புரிந்து கொள்ள முடியாமல் போனால் அவனை விட துரதிர்ஷ்டசாலி வேறு யாரும் இருக்க முடியாது. அந்த வகையில் மிகவும் பரிதாபத்துக்குரிய கதாபாத்திரம்தான் பரதன்.



இராமாயண கதாபாத்திரங்களிலேயே மிக உயர்ந்த,ஆனால் மற்ற இராமாயண கதாபாத்திரங் களினால் புரிந்து கொள்ளப் படாத கதாபாத்திரம் பரதனுடையது. "ஆயிரம் ராமர்கள் உனக்கு இணையாவார்களோ?" என்று கம்பரே சொல் கிறார் பரதன் மிக உயர்ந்தவன் என்று.

தாயை, மூத்தவர்களை மதிக்கும் விசயத்தில் இராமன், மற்ற கதாபாத்திரங்களை விட உயர்ந்து நிற்கிறான். மின் விளக்குகளுக்கு ஒவ்வொரு அளவு கோல் உண்டு. 10 வாட் பல்பிலிருந்து 1000 வாட் வரைகூட உண்டு. இவை எல்லாவற்றுக்கும் மதிப்பு இரவிலும், இருண்ட இடங்களிலும்தான்.

காலையில் உதய சூரியன் உதித்து வந்து விட்டால் எந்தவொரு "வாட்"க்கும் மதிப்பு கிடை யாது. சூரிய ஒளியில் எல்லா "வாட்"டும் மங்கித் தெரியும். இராமனுடைய மூத்தோர் சொல் மதிக் கும் பண்பின் முன்னால், பரதனுடைய, உயர்ந்த பண்புகள் அடிபட்டுப் போய் விடுகிறது.

பரதனுக்குத்தான் அரசுரிமை, ராமன் காடு செல்ல வேண்டும் என்று கைகேயி சொன்ன போது, "நான் ஏன் போக வேண்டும் என்றோ, அதை அப்பா சொல்லட்டும்" என்றோ இராமன் சொல்லவில்லை. மாற்றாந்தாயின் கட்டளையைக் கூட தந்தை சொன்னதாக ஏற்று மரவுரி தரித்து காடு சென்றான். இப்போது பரதன்

விசயத்துக்கு வருவோம். பரதனை, பெற்ற தாய் புரிந்து கொள்ளவில்லை. தகப்பன் புரிந்து கொள்ளவில்லை. தமையன் புரிந்து கொள்ள வில்லை. மந்திரி புரிந்து கொள்ளவில்லை.

கைகேயி, தசரதனிடம் இரண்டு வரம் கேட்ட போது, அதாவது, இராமன் காடு செல்லவேண்டும், பரதன் அரசாள வேண்டும் என்று கேட்ட போது, இந்த விசயத்தில் பரதனுக்கு உடன்பாடு உண்டா இல்லையா என்பது கூட தெரியாத தசரதன், கைகேயியைப் பார்த்து, "நீ எனக்கு மனைவியும் அல்ல; உன் மகன் பரதன் எனக்கு மகனும் அல்ல என்கிறார், நல்லா கவனிக்கணும் நம்ம மகன் என்றோ அல்லது என் மகன் என்றோ கூட சொல்லாமல் "உன் மகன்" என்கிறார். இதி லிருந்தே தசரதனுக்கு பரதன் மீது எந்த அளவுக்கு வெறுப்பு உண்டானது என்பது புரிகிறது.

இராமன் வனம் சென்ற சில நாளிலேயே தசரதன் இறந்து போக, அவரின் மறைவு பரதனுக்கு தெரிவிக்கப் படவில்லை. இவ்வளவுக்கும் பரதன், தனது மாமன் வீட்டுக்குத்தான் போயிருக்கிறான். ஒரு பெண்ணின் கணவன் இறந்து போனால், அவளது தாய், தந்தை வழி உறவுகளுக்கு முதலில் சொல்லி அனுப்புவதுதான் நடைமுறை வழக்கம். அந்த வழக்கம் கூட பின்பற்றப் படவில்லை.

தற்செயலாக அயோத்தி திரும்பும் பரதன், கொடிகள் தாழக் கிடப்பது, மக்கள் முகத்தில் சோகம் அப்பிக் கிடப்பது, மக்கள் அவன் மீது உமிழ்ந்த வெறுப்பான பார்வை, இவை எதற்கும் காரணம் விளங்காமல்தான் அரண்மனை வந்து சேருகிறான். வந்த பிறகுதான் தந்தை இறந்து போன விஷயம், இராமன் வனவாசம் சென்ற விஷயம் எல்லாம் தெரிய வருகிறது.

பரதனைக் கண்டதும், தலைமை பொறுப்பில் உள்ள மந்திரி கேட்கிறார் "முடி சூட்டு விழா வுக்கான ஏற்பாடுகளை செய்யலாமா?" என்று.

மந்திரிக்கு அழகுவரும் பொருள் உரைத்தல் என்றொரு பழமொழி உண்டு. எல்லா விசயங் களையும் எடை போட்டுப் பார்த்து அலசி ஆராய்ந்து, தப்பு எந்த பக்கம், அதில் பரதனுக்கு பங்கு இருக்கிறதா, உடன்பாடு இருக்கிறதா என்றெல்லாம் தெள்ளத் தெளிவாக தெரிந்து வைத்திருந்தாரென்றால், பரதனைப் பார்த்ததும் அப்படியொரு கேள்வியைத் தூக்கிப் போட்டிருக்க மாட்டார்.

எல்லாக் குழப்பத்துக்கும் தாய்தான் காரணம் என்பதை தெரிந்து கொள்ளும் பரதன், தகாத வார்த்தைகளால் தாயை கடிந்து கொள்கிறான். நீ எனக்கு வேண்டாம், அண்ணனைத் தேடி நான் போகிறேன் என்று சொல்லிவிட்டு, இராமனை போலவே மரவுரி தரித்து காடு செல்கிறான். தாயறியா சூல் உண்டா என்ற பழமொழி இங்கே பொய்த்துப் போய் விடுகிறது. ஒருவனுக்கு சேர வேண்டிய ஒன்றை தந்திரமாகப் பெற்று மகனுக்கு வாங்கித் தருகிறோமே. இதை மகன் விரும்புவானா என்பதுகூடத் தெரியாத தாயாகத் தான் கைகேயி இருந்திருக்கிறாள். ஆக, பரத னைப் பெற்ற தந்தை புரிந்து கொள்ளவில்லை. தாய் புரிந்து கொள்ளவில்லை. மந்திரி புரிந்து கொள்ளவில்லை.

மரவுரி தரித்து வனம் செல்கிறான் பரதன். அவன் வருகிறான் என்ற செய்தி கேட்டதுமே, கொதித்தெழுகிறான் குகன். அவனது வீரர்களை அழைத்து "போருக்கு தயாராகுங்கள். இந்த பரதனை அடித்து விரட்டுவோம் என்றெல்லாம் சொல்ல, வேட்டுவ குல வீரர்களோ எதுவுமே பேசாமல் தலை குனிந்து நிற்கிறார்கள். அவர்களை





உற்சாக படுத்த பலவாறு வீர உரை ஆற்றுகிறான் குகன். ஆனால் அவர்களோ போருக்கு தயாராக வில்லை.

பரதன் வரும் சேதி ராம லட்சுமணர் தங்கி இருக்கும் இடத்துக்கு வந்து சேருகிறது.கொதித் தெழுகிறான் லட்சுமணன். அவனைஉண்டு இல்லைன்னு பார்த்து விடுகிறேன் என்று லட்சு மணன் பொங்கி எழ ( பரதனைப் பெற்றவள், ராமனை காட்டுக்கு ஓட்டிவிட்டாலென்றால், மகன் இங்கு வந்து தொல்லை கொடுக்க வருகிறானோ என்கிற ஆத்திரம் லட்சுமணனுக்கு) அவனுடைய ஆத்திரத்துக்கு அணை போட்டு அடக்கி வைக் கிறான் ராமன்.

பரதனை பார்த்ததும், எதுவுமே பேசாமல் முகம் திருப்பி நிற்கிறாள் சீதை.

எந்த அண்ணனுக்காக தாயிடம் சண்டை போட்டுவிட்டு வந்தானோ, அந்த அண்ணன் கேட் கிறான் "தம்பி, அரியணை சுகமளிக்கிறதா?" என்று. அந்தவகையில் இராமன், பரதனைப் புரிந்து கொள்ளவில்லை.

அப்படி என்றால் பரதனை சரியாக புரிந்து கொண்டவர் யார்தான் என்ற கேள்வி எல்லார் மன திலும் எழத்தானே செய்கிறது. அதற்கான விடை.

பரதனை மிக சரியாக, பார்த்த மாத்திரத்தி லேயே புரிந்து கொண்டவர்கள், குகனுடைய படை வீரர்கள்தான். பரதன் கூடவே இருந்து பழகியவர்களுக்கு தெரியாமல் போன ஒரு விசயத்தை, படிப்பறிவில்லாத காட்டுவாசிகள், ஒரே ஒரு பார்வையிலேயே புரிந்து கொண்டார்கள்.

அதாவது, பரதன் வருவது கண்டு கோபம் கொண்ட குகன் பரதனை விரட்டி அனுப்ப, போருக்கு தயாராகும்படி சொல்லி வீரவுரை ஆற்ற, எந்தவொரு உணர்வும் இல்லாமல் படை வீர்கள் நிற்பதுகண்டு அதற்கான காரணம் கேட்கிறான் குகன்.

அவர்கள் சொல்கிறார்கள்: "வருகிறவனைப் பார்த்தால் சண்டைக்கு வருகிறவன் மாதிரி தெரியலையே. போருக்கான எந்த ஆயுதமும் இல்லை. இவனும் நமது தலைவன் இராமன் மாதிரி மரவுரி கட்டியல்லவா வந்திருக்கிறான். போருக்கு வருபவன் மரவுரி கட்டி சந்நியாசி மாதிரியா வருவான்?" என்று கேட்கிறார்கள். அப்போதுதான், ஆத்திரத்தைத் தணித்துக்கொண்டு அமைதி நிலைக்கு வரும் குகன், ஓடி சென்று, பரதனை, ராமன் இருக்கும் இடத்துக்கு அழைத்து வருகி றான். ஆக மொத்தத்தில், பரதனை மிகச் சரி யாக புரிந்து கொண்டது, படிப்பறிவில்லாத பாமர, வனவாசிகள்தான்.

e-magazine
aanmeegamalar.com

ஆன்மிகத் தகவல்களை
எளிமையாக, பாமரர்களும் புரிந்து
கொள்ளும் வகையில்
ஆன்மிகமலர் மெயில்
புத்தகத்தில் (e-book)
வெளியிட்டு வருகிறோம்...

eBook DOWNLOAD
free


இதுவரை வெளிவந்த
172 க்கும் மேற்பட்ட
இதழ்களை



aanmeegamalar.com

இணையதளத்தில்
இலவசமாக
படிக்கலாம்.

# காசியில் அருள்தரும் பல்வேறு விநாயக மூர்த்தங்கள்


ஜ்யேஷ்ட விநாயகர்


சதுர் தந்த விநாயகர்


உத்தண்ட முண்ட விநாயகர்

## சிங் துண்ட விநாயகர்

இந்த விநாயகரை வழிபடுவது தெரிந்தோ தெரியாமலோ செய்யும் அனைத்து வகையான பாவங்களையும் போக்கி விடும்.

## கூணி தாக்ஷ விநாயகர்

கூணி தாக்ஷ விநாயகர் காசியைகெட்ட தீய மனிதர்களின் எண்ணங்களிலிருந்து பாது. காக்கிறார். இந்த விநாயகர் மஹாலக்ஷ்மி பீடம் என்ற சக்திபீடத்தில் அமைந்துள்ளார். இங்கு செய்யப்படும் எந்த வழிபாடும் பன்மடங்கு பலன்களை தரும்.

## க்ஷிப்ர பிரசாத் விநாயகர்

க்ஷிப்ர பிரசாத் விநாயகரை வழிபட்டால் பக்தர்களுக்கு எல்லாவிதமான வெற்றியும் கிடைக்கும்.

## சிந்தாமணி விநாயகர்

சிந்தாமணி விநாயகரை வழிபடு வதன் மூலம் பக்தர்கள் தாங்கள் விரும்பும் அடைவார்கள். நன்கைர்வ விநாயகர்

விநாயகர் சிலைக்கு அருகில் ரித்தியும் ஸித்தியும் வீற்றிருப்பது குறிப்பிடத்தக்கது.

## தந்த ஹஸ்த விநாயகர்

தந்த ஹஸ்த விநாயகர் காசியை தீயவர்களிடமிருந்து பாதுகாத்து பக்தர்களுக்கு அருள்பாலிக்கிறார்.

## பிச்சண்டில் விநாயகர்

இந்த விநாயகர் இரவும் பகலும் காசியைக் காத்து பக்தர்களுக்கு அனைத்து




e-magazine
aanmeegamalar.com


சிங் துண்ட விநாயகர்


மித்ர விநாயகர்

வெற்றிகளையும் அருள்புரிகிறார்.

## உத்தண்ட முண்ட விநாயகர்

உத்தண்ட முண்ட விநாயகர் பக்தர்களுக்கு அனைத்து விதமான ஆசீர்வாதங்களையும் செழிப்பையும் வழங்குகிறார்.

இந்த விநாயகர் விராஜா பீடம் என்ற சக்திபீடத்தில் அமைந்துள்ளார். இங்கு செய்யப்படும் எந்த வழிபாடும் பன்மடங்கு பலன்களை தரும்.

## ஸ்தூல தந்த விநாயகர்

ஸ்தூல தந்த விநாயகரை வணங்கும் பக்தர்களுக்கு சித்தியை வழங்கும் ஆற்றல் படைத்தவர்.

## கலி பிரிய விநாயகர்

கலி பிரிய விநாயகர் காசியில் தங்கும் நேர்மையான பக்தர்களின் எதிரிகளுக்கு எல்லாவிதமான பிரச்சனைகளையும் உருவாக்குகிறார் என்பது ஐதீகம்.

## சதுர் தந்த விநாயகர்

சதுர் தந்த விநாயகரை தரிசனம் செய்தாலே பக்தர்களின் தடைகள் நீங்கிவிடும்.

## த்வி மக விநாயகர்

த்வி முக விநாயகரை வழிபட்டால் எல்லா வளமும் உண்டாகும்.

## ஜ்யேஷ்ட விநாயகர்

ஜ்யேஷ்ட மாதம், அமாவாசைக்குப் பிறகு சதுர்த்திக்கு சிறப்பு முக்கியத்துவம் கொடுக் கப்படுகிறது. இந்த நாளில் ஜ்யேஷ்ட விநா யகர்க்கு செய்யப்படும் பூஜைகள் சிறப்பான பலனைத் தரும்.

## கஜ விநாயகர்

பக்தியுடன் கஜ விநாயகர் விநாயகரை பக்தர்களுக்கு வழிபடும் யானை வாங்கும் அளவுக்கு செல்வம் கிடைக்கும். (இது அனைத்து செல்வங்களையும் குறிக்கிறது).

## கால விநாயகர்

கால விநாயகரை வழிபடும் பக்தர்கள் அகால மரணம் முதலியவற்றால் அஞ்ச வேண்டியதில்லை.

## நாகேஷ் விநாயகர்

உத்தண்ட முண்ட விநாயகரின் தெற்கு திசையை நோக்கி பக்தர்கள் நாகேஷ் விநாய கரை வழிபடலாம். நாகேஷ் விநாயகரை வழிபடுவதன் மூலம் பக்தர்கள் வாழ்விலும், இறப்புக்குப் பின்னரும் எல்லாவிதமான செழிப்பையும் பெறுவார்கள்.

## மணிகர்ணிகா விநாயகர்

மணிகர்ணிகா விநாயகர் பக்தர்களின் தடைகளை நீக்குகிறார். காசி காண்டத்தில் மணி கர்ணிகா க்ஷேத்திரத்தின் மகிமை விவரமாக குறிப்பிட ப்பட்டுள்ளது.


## ஆஷா விநாயகர்

காசி காண்டத்தின் காசியில் ஆஷா விநாயகரை வழிபட்டால் பக்தர்களின்

e-magazine
aanmeegamalar.com

காசியைப் பற்றி முழுமையான தகவல்களை பல்வேறு மொழிகளில் எழுதி, அனைவரும் காசியைப் பற்றி அறிந்து கொள்ள பல்வேறு முயற்சிகளை செய்யும் எழுத்தாளர் பி.எஸ்.வெங்கடரமணன் காசியைப் பற்றி முழுத் தகவல்களையும் நமது இதழில் தொடராக எழுதுகிறார். இவர் காசியைப் பற்றி எழுதிய புத்தகத்தை பாரதப் பிரதமர் நரேந்திர மோடி பாராட்டியுள்ளது குறிப்பிடத்தக்கது.







யக்ஷ விநாயகர்

ஆஷா விநாயகர்

e-magazine
aanmeegamalar.com

அனைந்து விருப்பங்களும் நிறைவேறும்.

## சிருஷ்டி விநாயகர்

காசி காண்டத்தின்படி,தெற்கு திசையில் எப்போதம் பக்தர்களுக்கு அருள்பாலிக்கும் சிருஷ்டி விநாயகர் உள்ளார்.

## யக்ஷ விநாயகர்

காசி காண்டத்தின் படி வடகிழக்கு நோக்கிய யக்ஷ விநாயகர் அனைத்து தடைகளையும் நீக்கி பக்தர்களின் வாழ்க்கையை சீராக்குகிறார்.

## கஜ கர்ண விநாயகர்

வடக்கு திசையில் உள்ள கஜ கர்ண விநாயகர் தனது பக்தர்களுக்கு எல்லா மகிழ்ச்சியையும் செழிப்பையும் தருகிறார்.

## சித்ர கண்ட விநாயகர்

காசியில் மேற்கு திசையில் சித்ர கண்ட விநாயகர் காசியை தீய சக்திகளிடமிருந்து காக்கிறார்.

## மித்ர விநாயகர்

காசி காண்டத்தின்படி யம தீர்த்தத்தின் வடக்கு திசையில், தனது பக்தர்களுக்கு வெற்றி மற்றும் செழிப்புடன் அருள் பாலிக்கும் மித்ர விநாகரைக் காணலாம்.

## மோத விநாயகர்

மோத விநாயகர் காசி கர்வட் கோவிலில் வீற்றிருந்து பக்தர்களுக்கு அருள் புரிகிறார்.

## பிரமோத விநாயகர்

பிரமோத விநாயகர் இந்த வட்டாரத்திலேயே அமைந்துள்ளார். அருகிலுள்ள மற்ற தெய்வங்கள் விஸ்வேஸ்வரர், அன்னபூர்ணா,சனீஸ்வர், சுக்ரேஸ்வரர், கல்ராத்ரி போன்ற விவரங்கள் மற்ற இடங்களில் குறிப்பிடப்பட்டுள்ளன.

## சுமுக விநாயகர் மற்றும் துர்முக விநாயகர்

சுமுக விநாயகர் மற்றும் துர்முக விநாயகர் சிலைகள் காசி விஸ்வநாதர் கோவில்



சுமுக விநாயகர்



துர்முக விநாயகர்

வளாகத்திற்கருகில் ஸ்தாபிக்கப்பட்டுள்ளன.

## கண நாத விநாயகர்

கண நாத விநாயகர் விஸ்வேஸ்வரர் கோவிலுக்கு அருகில் உள்ள துண்டி ராஜ் கல்லியில் அமைந்துள்ளார். இவர் ஒரு சக்திவாய்ந்த கடவுள்.

## ஞான விநாயகர்

ஞான விநாயகர், கோவா கல்லி செள ராஹாவில் லாங்லீஸ்வரர் கோவிலில் வீற்றி ருக்கிறார். இந்த கோவிலில் பூஜை வழிபாடு செய்யும் பக்தர்கள் ரோக த்திலிருந்து விடுபடுகிறார்கள்

## த்வார விநாயகர்

காசி காண்டத்தின் படி, தவார விநாயகர் காசியை தீய சக்திகளுக்கு எதிராக பாது காக்கிறார்.

## அவி முக்த விநாயகர்

காசி காண்டத்தின் படி, அவி முகத விநாயகர், அவி முகத க்ஷேத்திரத்தில் (காசி) தங்கியிருக்கும் பகதர்களின் வாழக்கையில் இருந்து அனைத்து கஷ்டங்களையும் நீக்குகிறார்.

சில மூத்த பண்டிதர்களின் படி, அசல ஆவி முக்த விநாயகர் சிலை காணாமல் போய்விட்டது. இப்போது வேறு இடத்தில் இந்த தெய்வம் இருப்பதாக கூறப்படுகிறது ஞான வாபி மசூதியில் சுவரில், ஆனால், இங்கு தரிசனம் செய்வதற்கு அனுமதி இல்லை.

## ஒரு முக்கியமான விஷயம்

காசி காண்டத்தின் கூற்றுப்படி டுண்டி விநாயகரைத் தவிர, மேலே குறிப்பிடப்பட்ட இடங்களில் ஐம்பத்தாறு விநாயகர்கள் உள்ளனர். மேற்கூறியவை தவிர, சில பக்தர்கள் மற்ற விநாயகர் சிலைகளை நிறுவி யிருக்கலாம், அவையும் வழிபடப்படுகின்றன.

மேற்கூறிய ஐம்பத்தாறு விநாயகரகளில் சில முழுகக/தனியாக இருக்கும் கோவில் கள் பல மற்ற கோவில்களின் வளாகத்தில் உள்ளன. ஒரு சில விநாயகர சிலைகள் சுவரில் அல்லது சாலையோரம் அல்லது காட நதியின் படிகளில் பொருத்தப்பட்டுள்ளன. ஆனால் உள்ளூர் மக்கள் இந்த தெய்வங் களை அனைத்து ஆன்மீக ஆர்வத்துடன் வணங்குகிறார்கள்

காசியில் “சப்பன் விநாயக யாத்ரா என்று பிரபவமாக அறியப்படும் விநாயகரின்ஐம்பத் தாறு வழிபாட்டுத் தலங்களில் யாத்ராமேற் கொள்ள உதவும் பல குழுக்கள் உள்ளன. யாத்திரை இரண்டு மூன்று நாட்கள் ஆகலாம். இத்தகைய புண்ணியப் பணியை மேற்கொள் ளும் பக்தர்களுக்குத் மகிழ்ச்சியடைவார்கள். வழிகாட்ட முந்தைய பக்கங்களில் கொடுக்கப்பட்டுள்ள விநாய கரின் வழிபாட்டுத் தலங்கள் காசி காண் டத்தில் தோன்றியவாறு வரிசையில் கொடுக் கப்பட்டுள்ளன.

– காசி பயணம் தொடரும்

பி.எஸ்.வெங்கடரமணன்
தொலைபேசி எண்: 9839061178


# சித்துக்களும் சித்தர்களும்

நீரின் மேல் நடப்பதும் நிலத்தை தோண்டி தன்னை புதைத்து கொண்டு பல வருடங்கள் சுவாசத்தை அடக்கி வாழ்வதும் நெருப்புக்குள்ளே சுகமாக திரிவதும் ஆகாயத்தில் பறவைகள் போல பறப்பதும் அவ்வளவு சாமான்யமாக யாருக்கும் கிடைக்கும் வாய்ப்புகள் அல்ல அரிதிலும் அரிதான இத்தகைய அமானுஷ்யமான சாதனைகள் தங்களுக்கு கிட்டிய போதும் அது வேண்டாம் அது தேவையற்ற சுமையே தவிர நிரந்தரமான சுகத்தை தரும் சாதனம் அல்ல என்று ஸித்துக்களை சித்தர்கள் ஒதுக்குவது ஏன்?

கங்கைகரையில் வயது முதிர்ந்த சாது ஒருவர் தியானம் செய்து கொண்டிருக்கிறார். அவர் முகத்தில் தெரிகின்ற தேஜசை பார்த்து இவர் சிறந்த மனிதர் என்ற எண்ணம் தோன்றி வேறொரு சாது இவரை பார்த்து வணங்கி நிற்கிறார். தன் எதிரே நிற்கும் சாதுவை கண்ட முதிய சாது ஐயா நீங்கள் வணங்குகின்ற அளவிற்கு நான் பெரியவன் அல்ல இடையினும் இடையன் கடை யினும் கடையன் உங்களை பார்த்தால் மகா யோகி போல தெரிகிறீர்கள் எனக்கு உங்கள் ஆசிர்வாதங்களை தாருங்கள் பதிலுக்கு வணங்கி நின்றார்.

**கடவுள் உருவாக்கிய மதம்**

முதிய சாது தன்னை வணங்குவதை பார்த்த புதிய சாதுவுக்கு கர்வம் வந்துவிட்டது பரவாயில்லை பெரியவரே நான் உங்களை விட தவத்தில் பெரியவன் என்றாலும் வயதில் சிறியவன் அதனால் நான் உங்களை வணங்கியது பாதகம் அல்ல என்று சொன்னார். முதிய சாதுவோ ஐயா நீங்கள் எத்தனை வருடமாக தவம் செய்கிறீர்கள் அந்த தவத்தால் நீங்கள் பெற்ற நன்மைகள் என்ன? என்று கேட்டார். அதற்கு அந்த சாது



நான் இருபது வருடமாக தவம் செய்து வருகிறேன் அதன்பயனாக எனக்கு தண்ணீர் மீது நடக்கின்ற சக்தி கிடைத் திருக்கிறது என்று பெருமையாக சொன்னார்.

அப்படியா மிகவும் நல்லது என்று மட்டும் சொல்லிய முதிய சாது தியானம் செய்ய துவங்கி விட்டார். இது அந்த புதிய சாதுக்கு அவமரியாதையாக பட்டது. ஒருவேளை இவர் தான் தண்ணீரின் மீது நடப்பதாக சொல்லியதை நம்பவில்லையோ என்ற ஐயப்பட்டு ஐயா பெரியவரே இதோ இந்த கங்கை நதியின் மீது நடந்து காட்டுகிறேன் பாருங்கள் என்று கூறினார். பெரியவர் வேண்டாம் என்று தடுத்தும் இவர் கேட்கவில்லை. கங்கையின் இக்கரையில் இருந்து அக்கரைக்கும் அக்கரையில் இருந்து இக்கரைக்கும் தண்ணீர் மேலே தரையில் நடப்பது போல நடந்து காட்டினார். அதன் பிறகு அந்த பெரியவரை பார்த்து இப்போதாவது நான் சொன்னது உண்மை என நம்புகிறீர்களா என்று கேட்டார்.

மெதுவாக சிரித்து கொண்ட முதிய சாது ஐயா தவ சீலரே கங்கையை கடந்து செல்ல வேண்டுமானால் ஒடகாரனிடம் காலணா கொடுத்தால் கொண்டு விட்டுவிடுவான்.

அதற்கு போய் இருபது வருடங்களை செலவு செய்த்திருக்கிறீர்களே அந்த நேரத்தில் இறைவனின் தரிசனம் பெற முயற்சி செய் திருக்கலாமே என்று சொன்னாராம் .

இந்திய ஞானிகளும் இந்துமத சித்தர்களும் ஸித்துகளை பற்றி இதே மாதிரியான எண்ணம் கொண்டவர்களாக இருந்தார்களே தவிர அவர்களின் நோக்கமும் முயற்சியும் இறைவனை மட்டுமே அடைவதில் குறியாக இருந்தது என்று சொல்லலாம்.


அமானுஷ்யமான இந்த சித்திகள் ஒரு மனிதனுடைய அகம்பாவத்தையும் ஆணவத்தை யும் அதிகரிக்க செய்து இறைவனை மறந்து போகும் படி செய்துவிடும்.ஸித்துகளின் மீது மிக அதிகமாக ஈடுபாடு கொண்டவன் ஸித்துகள் என்ற எல்லையோடு மட்டுமே தனது ஆன்மீக பயணத்தை நிறுத்தி கொள்கிறான். அந்த எல்லையை தாண்டி அவனால் செல்ல முடியாமல் போகிறது. எனவே பணத்தின் மீதும் காமத்தின் மீதும் எச்சரிக்கையாக இருப்பது போலவே ஸித்துகளின் மீதும் எச்சரிக்கையாக இருக்க வேண்டும் என்பதே நமது ஞானிகளின் உறுதியான கருத்துகளாக எப்போதுமே இருந்து வருகிறது. அதனால் தான் ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மா

அந்தராயான் வதந்த்யேதா
யுஞ்ஜதோ யோகம் உத்தமம்
மயா ஷம்பத்ய மானஷ்ய
கால க்ஷபண ஹேதவ

என்று பாகவதத்தில் மிக அழகாக சொல்கிறார். அதாவது சிறந்ததாகிய பக்தி யோகத்தை பெறுபவனும் என்னிடமே ஐக்கியமாகி விடுபவனாகிய யோகிக்கு காலத்தை வீணடிக்க கூடிய இந்த ஸித்துகள் இடையுறு செய்கின்றன. என்பதே கண்ணாபெருமானின் மிக தெளிவான கருத்தாகும். ஆனாலும் ஆன்மீக பயணம் மேற்கொள்ளும் ஆரம்பகட்ட யோகி களுக்கு ஸித்துக்கள் என்பது மிகவும் அவசியமது என யோக சாஸ்திர நூல்கள் சொல் கின்றன. அது எதற்காக?

வெகுதொலைவில் இருக்கின்ற ஒரு ஊருக்குநாம் பயணம் செல்கிறோம் செல்லு கின்ற வழியில் இளைப்பாறுதல்கொள் வதற்கு சில தங்கும் இடங்கள் அவசியம் தேவை அப்படி பட்ட இடங்கள் இருந் தால் தான் களைப்பில்லாத பயணத்தை மேற்கொள்ள முடியும்.





e-magazine
aanmeegamalar.com

மேலும் நாம் செல்வது சரியான பாதை இந்த வழியில் சென்றால் நிச்சயமாக இறுதி இலக்கை அடைந்துவிடுவோம் என்ற நம்பிக்கையின் ஆறுதலும் கிடைக்கும்.

இதை வேறு வகையிலும் சொல்லலாம். நீதி மன்றத்தில் இருக்கின்ற வழக்கு கண்டிப்பாக வெற்றி அடைந்தே தீருமென்று நம்புவதற்கு சில சாட்சிகளும் ஆதாரங்களும் தேவை அவைகள் உறுதியானதாக இருந்தால் வழக்கின் முடிவு வெற்றி மட்டுமே என்ற எண்ணத்தில் நிம்மதியாக இருக்கலாம். இறைவனை அடைவது என்ற வழக்கு கண்டிப்பாக வெற்றிகரமாக முடியும் என்பதை காட்டுவதே சாட்சியங்கள் ஆதாரங்கள் என்ற ஸித்துகள்.

இத்தகைய ஸித்துகளை பெறுபவர்கள் இவைகள் வெறும் சாட்சியங்கள் மட்டுமே இறுதி இலக்கு அல்ல என்பதில் உறுதியாக இருக்க வேண்டும். மாறாக ஸித்துகளின் மேல் ஏற்படுகின்ற கவர்ச்சியால் அதிலேயே நின்று விடுவார்களேயானால் முக்தி என்ற இலக்கு கிடைக்காமலே போய்விடும். அவர்களும் நம்மை போன்று பிறப்பு இறப்பு என்ற சம்சார வளையத்திற்குள் கிடந்தது அல்லல் பட வேண்டி வரும். இறை தரிசனம் பெற விரும்புவதே பிறப்பற்ற நிலையை அடைவதற்கே. அதை விட்டு விடுவது சாரத்தை விட்டு விட்டு சக்கையை பற்றி கொள்வதை போல அறியாமை நிலையாகி விடும். எனவே தான் சித்தர்கள் ஸித்துகளை தடையாகவும் இடையூறாகவும் சில நேரங்களில் மலமாகவும் கூட வெறுத்து ஒதுக்கினார்கள்.




உண்மையான சித்தர்கள் எவரும் தங்களிடம் உள்ள மாயா சக்திகளை பயன் படுத்தி உலகத்தவரை தன்பால் ஈர்க்க விரும்புவது இல்லை. காரணம் அவர்களுக்கு உலகத்தவரின் போக்குகளை பற்றி எந்த கவலையும் அக்கறையும் கிடையாது. மோதும் மட்டும் மோது ஓடுமட்டும் ஓடு எப்படியோ ஓடி ஆடி முட்டி மோதி கடேசியில் வரவேண்டிய இடம் இது என்று தீர்க்கமாக ஒருநாள் தெரிந்து கொள்வாய் அதுவரை பட்டறி கெட்டறி என்பதே சித்தர்களின் சித்தாந்தமாகும்.

இதை படிக்கும் போது நம்மில் பலருக்கு சித்தர்களின்

ஸித்துவேலைகள் பலவற்றை கேள்வி பட்டிருக்கிறோமே சில நேரங்களில் கண்களாலும் பார்த்திருக்கிறோமே சித்தர்கள் ஸித்துக்களை வெறுக்கிறார்கள் என்றால் இதை அவர்கள் செய்து காட்ட வேண்டிய அவசியம் என்ன? என்ற கேள்வி சர்வ சாதாரணமாக தோன்றும்.

இந்த கேள்வியை தவறு என்று யாரும் சொல்லிவிட முடியாது. காரணம் சில மகா புருஷர்களின் வாழ்க்கையை பார்க்கும் போது அவர்கள் வாழ்வில் பல ஸித்துகள் நடைபெற்று இருப்பதை அறிய முடிகிறது.



திருமூலர் கூடுவிட்டு கூடுபாய்ந்ததும் அருணகிரிநாதர் கிளி வடிவத்தில் வாழ்ந்ததும் நமது காலத்திலேயே ரமண மகரிஷி பல வருடங்கள் பாதாள குகையில் அன்ன ஆகாரம் எதுவும் இல்லாமல் தவம் செய்ததும் கற்பனைகளோ கட்டுகதைகளோ அல்ல ரத்தமும் சதையுமான உண்மைகள் பறந்து விரிந்த பாரத திருநாட்டில் மட்டுமல்ல நம் நாட்டை கடந்த பல பகுதிகளிலும் சித்தர்களும் சித்த புருஷர்களும் அதி அமானுஷ்யமான காரியங்கள் பலவற்றை செய்திருக்கிறார்கள் அவைகள் எல்லாம் ஏன் என்ற நியாயமான கேள்வியும் நமக்கு தோன்றும்.

அத்தகைய சித்தர்களில் ஸித்து விளை யாட்டை மிக நுணுக்கமாக அணுகி ஆராய வேண்டும். இந்த ஸித்துகள் எதுவும் தங்களை முன்னிலை படுத்த அவர்களால் நிகழ்த்த பட்டது அல்ல தவிர்க்க முடியாத சில காரணங் களுக்காக உலகத்தையும் உலக மக்களையும் ஆன்மீக பயணம் என்பது போலி யானது அல்ல கற்பனையான மாயா உலகத்திற்கு செல்வதும் அல்ல இந்த உலக வாழ்வானது எந்த அளவு உண்மையோ அதே அளவு உண்மையானது இறையனுபவம் என்பதை நம்மை போன்ற சாதாரண ஜனங்களுக்கு சில ஆதாரங்கள் மூலம் காட்டுவதற்காகவே ஆகும்.



யோகி
ஸ்ரீ ராமானந்த குரு

பட்டினத்தார் கூட தனது வாழ்வில் பல அற்புதங்களை நிகழ்த்தி உள்ளார். தன்வினை தன்னை சுடும் ஓட்டப்பம் வீட்டை சுடும் என்று விஷம் நிறைந்த அப்பத்தை வீசி எறிந்து வீட்டு கூரையை நெருப்பு பிடிக்க வைத்ததும் ஈரமான வாழை மட்டைகளால் தாயாரின் சிதைக்கு நெருப்பு மூட்டியதையும் நம்மால் மறக்கவே முடியாது.

தான் இத்தகைய சாதனைகளை செய்தேன் அதற்காக அனைவருமே என்னை கடவுளாக போற்றுங்கள்என்று எந்த இடத்திலும் பட்டினத்தார் சொல்லவில்லை மாறாக உலகம் நிலையில்லாதது பணம் பொருள் பதவி அழிய கூடியது இன்று ஓரிடத்திலும் நாளை வேறோரிடத்திலும் உருண்டு செல்ல கூடியது இவைகளை நிரந்தரம் என்று நம்பி வாழ்நாளை வீண்நாளாக ஆக்கிவிடாதீர்கள் என்று எச்சரித்து நம்மை இறைவன்பால் செல்ல வைக்கிறார் என்பதை மனதில் வைக்க வேண்டும்.

நமது நாட்டில் பொதுவாக சிவவாக்கியர், பிரம்ம முனி, இடைக்காடர், சட்டை முனி, அகப் பேய் சித்தர், தேரையர், பாம்பாட்டிசித்தர், குதம்பை சித்தர், அழுகுணி சித்தர், திருமூலர், கருவூரார், காலாங்கி நாதார், கொங்கணர், போகர், அகத்தியர், பட்டினத்தார், ரோமரிஷி, மாசித்தர் என்று பதினெட்டு சித்தர்களை பற்றி அதிகமாக பேசுகிறோம்.

இந்த பட்டியலில் உள்ள பெயர்கள் அல்லாது வேறுவொரு பதினெட்டு பெயர்கள் அடங்கிய பட்டியலும் இருக்கிறது அவை தவிர்த்த வேறு சில பட்டியல் கூட இருக்கிறது.

பல இடங்களில் பதினெட்டு சித்தர் கள் என்ற எண்ணிக்கையும்

e-magazine
aanmeegamalar.com

மீறி அதிகபடியான சித்தர்கள் கூறபடு கிறார்கள். வடலூர் வள்ளலார் கூட சித்தர்கள் வரிசையில் வருகிறார்.

மகாகவி பாரதி கூட நானும் ஒரு சித்தன் என்று தன்னை தானே சித்தராக பிரகடன படுத்தி கொள்கிறார்.

இவைகளை பார்க்கும் போது சித்தர்களின் எண்ணிக்கை பதினெட்டு அல்ல அவைகளையும் தாண்டி எண்ணில் அடங்காத ஏராளமான அருளாளர்களை சித்தர்களின் எண்ணிக்கையில் சேர்த்து கொண்டே போகலாம் என்று தெரிகிறது.

காரணம் சித்தம் அடக்கிய ஸித்துகள் பெற்ற அனைவருமே சித்தர்கள் எனும் போது சித்தர்களின் எண்ணிக்கை இவ்வளவு தான் என்று வரையற செய்து விட முடியாது.

நீரின் மேல் நடப்பது, காற்றை கட்டளை போட்டு நிறுத்துவது, ஐந்து அப்பங்களையும் சில மீன்களையும் மட்டுமே வைத்து கொண்டு ஐயாயிரம் பேர்களுக்கு விருந்து பரிமாறியது கொடுக்க கொடுக்க குறையாத திராட்சை ரசத்தை உருவாக்கியது தனது வஸ்திரத்தை தொட்ட மாத்திரத்திலேயே நோய்கள் விலகும் படி செய்தது இப்படி நிறைய ஸித்துகளை ஏசுநாதர் வாழ்வில் கூட காண முடிகிறது.

அவரால் உலகில் நிகழ்த்த பட்ட அற்புதங் களை காணும் போது அது அவர் இந்திய ஞானிகளிடம் பல காலம் தங்கி கற்ற யோக மார்க்கத்தின் வழி என்பதை நம்மால் தெளிவாக தெரிந்து கொள்ள முடிகிறது.

அதன் அடிப்படையில் பார்க்கும் போது பதினெட்டு சித்தர்கள் வரிசையில் ஏசு நாத ரையும் சேர்த்து கொள்ளல்லாம் என்றே நமக்கு தோன்றுகிறது.

சித்தர்களாலும் சித்தர்களின் சித்தாந்தங் களாலும் இந்து மதத்தில் மிக சிறந்த மறுமலர்ச்சி ஏற்பட்டது என்றே சொல்ல வேண்டும். அந்த மறுமலர்ச்சியின் விளைவாகவே தொன்மை வாய்ந்த இந்துமதம் நவீன காலத்திய சவால்களை ஏற்றுக்கொண்டு வீர நடைபோட்டு வருகிறது என்று துணிந்து சொல்லல்லாம்.

அத்தகைய சித்தர்களின் சித்தாந்தம் என்னவென்று ஓரளவாவது அறிந்து கொண்டால் மட்டுமே இந்து மதத்தின் உண்மையான வடிவத்தை ஓரளவு தரிசனம் செய்யலாம். எனவே நமது அடுத்த பதிவில் சித்தர்களின் சிந்தனைகளை சிறிது சிந்திப்போம்.

யோகி ஸ்ரீ ராமானந்த குரு
போன்: 09442426434

ஆன்மிகமலர்.காம்
ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!!



நமது இதழுக்கு விருப்ப சந்தா செலுத்த விருப்பமுள்ளவர்கள்

UPI மற்றும் வங்கி வாயிலாகவும் செலுத்துங்கள்...

AANMEEGA MALAR TRUST
ACCOUNT NO. 49510100003648
IFSC CODE: BARB0KODAMB
(FIFTH CHARACTER IS ZORO)
BANK OF BARODA
(KODAMBAKKAM BRANCH)

e-magazine
aanmeegamalar.com

# வேதாந்தம் பிரசாரம் செய்ய போதிக்க விரும்பும் கருத்து

தீமை செய்கின்ற ஆயிரம் பேரைக் கொல்வதன் மூலம் தீமையை உலகத்திலிருந்து நீக்க முயல்வதால் உலகத்தில் தீமைதான் அதிகமாகும். ஆனால் அறிவுரைகளின் மூலம் மக்கள் தீமை செய்யாமல் தடுக்கப்பட்டால் உலகத்தில் தீமையே இருக்காது.

நீ உன் மனைவியோடு வாழலாம்; அவளைக் கைவிட வேண்டும் என்பதல்ல. ஆனால் அவளிடம் கடவுளைக் காண வேண்டும். உங்கள் குழந்தைகளில் இறைவனைக் காணுங்கள். எல்லாவற்றிலும் இப்படியே. வாழ்விலும் சாவிலும் இன்பத்திலும் துன்பத்திலும் எல்லாவற்றிலுமே இறைவன் சமமாக நிறைந்திருக்கிறார். உலகம் முழுவதும் இறைவன்தான் நிறைந்திருக்கிறார். கண்களைத் திறவுங்கள், அவரைப் பாருங்கள். வேதாந்தம் இதைத்தான் போதிக்கிறது.

நாம் நமது கற்பனையால், நமது அனுமானத்தால் உருவாக்கிக் கொண்டிருக்கும் உலகத்தைத் துறந்துவிட வேண்டும்.

இருந்தது கடவுள் மட்டுமே. குழந்தையில், மனைவியில், கணவனில் எல்லாவற்றிலும் இருப்பவர் அவரே. நல்லவரில் இருப்பதும் அவரே, தீயவரில் இருப்பதும் அவரே, பாவத்தில் இருப்பதும் அவரே, பாவியாக இருப்பதும் அவரே. வாழ்விலும் அவரே இருக்கிறார். சாவிலும் அவரே இருக்கிறார். வேதாந்தம் இந்தக் கருத்தைத்தான் பிரச்சாரம் செய்ய, செயலில் காட்ட விரும்புகிறது, போதிக்க விரும்புகிறது.

– சுவாமி விவேகானந்தரின் ஞானமொழிகள்பாகம்– 29

ஆன்மிகமலர்.காம்



ஆன்மிகமலர்
மெயில் புக்




# இதுவரை வெளிவந்த அனைத்து இதழ்களையும் எந்தவித கட்டணமின்றி முற்றிலும் இலவசமாக படிக்க










## aanmeegamalar.com

## இணையதளத்தை

## பார்க்கவும்









## இந்த மூன்று குற்றங்களை செய்துள்ளீர்களா?

# பலனை அனுபவிக்க தயாராகுங்கள்

aanmeegamalar.com



மனிதனாக பிறந்து விட்டால் ஏதாவது ஒரு பாவம் நிச்சயமாக செய்து விடுகிறான். அதனால் அவன் படும் துன்பங்கள் ஒரு கட்டத்தில், அவன் செய்த பாவத்தை நினைத்து வேதனைப்பட வைக் கிறது. இது தான் கர்ம விதி பயன் என்பார்கள்.

மனிதன் செய்யும் ஒருசில பாவங்களுக்கு இறைவன் மீது செலும் பக்தி மற்றும் பாவத்தின் கொடுமையை உணர்ந்து வருந்தும்போது தீர்ந்து போக குறைந்த அளவு வாய்ப்பு இருந்தாலும், ஒரு சில பாவங்களை போக்க என்னதான் இறை வனிடம் விழுந்து அழுது புலம்பினாலும் அந்த பாவங்களின் பலனை அனுபவித்தே ஆகவேண்டும் என்பது விதியாகவே உள்ளது.

அந்த வகையில் மிகவும் குறிப்பிட்டு சொல்ல வேண்டுமானால் 3 பாவங்களை எந்தவித பரிகாரங்கள் மூலமும் தீர்க்க முடியாது என்று முன்னோர்கள் கூறுகின்றனர்.

கீழே உள்ள அந்த மூன்று பாவங்களை உங்கள் வாழ்நாளில் செய்துள்ளதாக நினைக்கிறீர்களா? உடனே அந்தப் பாவங்களுக்குரிய பலனை சுமக்க உங்கள் மனதையும் உடலையும் தயார்ப் படுத்திக் கொள்ளுங்கள்.

முடிந்த அளவு இறைவனிடம் இந்த பாவத்தை போக்குமாறு மன்றாடுவதைவிட்டுவிட்டு,அதற்குரிய பலனை அனுபவிப்பதற்குரிய மனோ திடத்தை கொடுக்குமாறு வேண்டிக் கொள்ளுங்கள். 3 வகையான பாவங்களைப் பற்றி விரிவாக பார்ப்போம்.

## 1.பெற்றோர்களை கைவிடுதல்:

திருமணம், தனியாளாக பொருளீட்டும் அளவிற்கு தன் நிலை உயர்வது, யாரின் உதவியும் தேவையில்லை என்ற அளவில் பொன், பொருள், புகழ், பதவி போன்றவற்றை அனுபவிக்கும்சூழ்நிலை உருவாகும் போது பார்ப்பது அனைத்தும் அலட்சியமாகத்தான் தோன்றும்.

அந்த வகையில் பாராட்டி சீராட்டி வளர்த்த பெற்றவர்களைக்கூட ஏற்றுக் கொள்ளும் மனோ நிலையை ஆடம்பர வாழ்வு நமது கண்ணை மறைத்துவிடும்.

ஆனலும், ‘பெத்த மனம் பித்து பிள்ளை மனம் கல்லு’ என்ற பழமொழிக்கு ஏற்ப, பிள்ளைகளுடைய மனம் பெற்றோர்களை ஏற்காவிட்டாலும், பெற்றோர்களுடைய மனம் பிள்ளைகளை சுற்றிதான் இருக்கும். இது இயற்கையாக நடக்கக் கூடிய ஒரு விஷயம்.



பெற்றோர்கள் தெய்வத்திற்கு நிகராக பார்க்கப்பட வேண்டியவர்கள். இப்படியான பெற்றோர்களை எந்த ஒரு மனிதன் மதிக்காமல், உதாசீனப்படுத்துகிறானோ? அவன் விமோசனமே இல்லாத பாவத்தை சுமக்க வேண்டிய சூழ்நிலை வரும்.

பிள்ளைகள் பெற்றோர்களுக்கு செய்யும் பாவங்களுக்கு எந்த பரிகாரம் செய்தாலும் விமோசனம் என்பது கிடையாது என்று சாஸ்திரத்தில் சொல்லப்பட்டுள்ளது.

பூமியுடன் உங்களுக்கு உண்டான தொடர்பை ஏற்படுத்திக் கொடுத்ததே பெற்றோர்கள்தான், அவர்களை மறந்தால் மேலும் அவர்களை மறந்து சுயநலமாக செயல்பட்டால் அதற்கான தண்டனையும் உங்களுக்கு காத்துக் கொண்டிருக்கிறது.

இதற்கு நீங்கள் ஆயிரம் காரணங்கள் கூறினாலும் அதை இறைவன் ஏற்பதில்லை!

## 2.உயிரை வதைத்தல்:

இறைவனால் படைக்கப்பட்ட எந்த ஒரு உயிரையும் மனிதன் கொல்லக்கூடாது என்பது மனிதனுக்கு வகுக்கப்பட்ட விதி.

இந்த விதியை மீறி ஒரு மனிதன்,இன்னொரு உயிரை கொல்லும் பொழுது அவனுக்கு பிரம்ம ஹத்தி தோஷம் ஏற்படுகிறது.

பிரம்மஹத்தி தோஷம் நன்றி மறப்பவர்களுக்கும், பசுவைவதைப் பவர்களுக்கும், குரு துரோகம் செய்பவர்களுக்கும்,அதர்ம வழியில் நடப்பது, சொத்தை அபகரிப்பது, பெற்ற தாயை அவமானப் படுத்துவது, உண வில்லாமல் பட்டினி கிடக்க செய்தது’ போன்ற செயல்களை செய்பவர்களுக்கு இந்த தோஷம் உண்டாகிறது.

இதில் பிற உயிரைக் கொல்லும் பாவம் புரிபவர்களுக்கு எந்தப் பரிகாரம் செய்தாலும் அவர்களுக்கு விமோசனம் என்பது


e-magazine
aanmeegamalar.com



கிடையாது. அந்தப் பிறவியில் அல்லது அதற்கு அடுத்த பிறவிகளில் அவருடைய வாழ்வு சாவதே மேல் என்கிற உணர்வை அவர்களுக்கு ஏற்படுத்துவதாக நிச்சயம் அமையும். அந்த அளவிற்கு வலி நிறைந்த வாழ்க்கையை தரக்கூடியது இந்த தோஷம்!!

ஆன்மிகமலர் .காம்

## 3.வார்த்தைகளால் காயப்படுத்துதல்:

ஒருவர் மனம் புண்படும்படியாகப் பேசுதல் என்பதும் பாவம் தான்.

இதைத்தான் திருவள்ளுவர் திருக்குறளில்,

'தீயினால் சுட்ட புண் உள்ளாறும் ஆறாதே நாவினால் சுட்ட வடு' என்று கூறினார்.

நீங்கள் தீயைக் கொண்டு ஒருவரை காயப் படுத்தினால் கூட அந்த காயம் சில நாட்களில் வலி போனதும் ஆறிவிடும். வார்த்தைகளால் ஒருவரை கொள்ளும் பொழுது அதன் காயம் உயிரே பிரிந்தாலும் ஆறுவதில்லை.

அவசரபட்டு வார்த்தைகளை விட்டு விட்டு, என்னதான் மன்னிப்பு கேட்டாலும் பேசிய வார்த்தைகளை மீண்டும் சரி செய்துவிட முடியாது.

பேசியது பேசியது தான். அந்த வார்த்தைகள் காற்றில் அலைந்து கொண்டே இருக்கும். அவர்களுடைய மனதை விட்டு எப்பொழுதும் நீங்காது போய்விடும்.

இதனால் தான் ஒவ்வொரு வார்த்தைகளும் நிதானமாக பேச பழகிக் கொள்ள வேண்டும்.

வாய் இருக்கிறது என்பதற்காக இஷ்டத்திற்கு பேசினால், அந்த பாவ பயனை நீங்கள் தான் சுமக்க வேண்டியது வரும்.

'மாதா, பிதா, குரு, தெய்வம்' இந்த நான்கு பேரை வார்த்தைகளால் கடுமையாக நீங்கள் தாக்கினால், அதனால் வரும் துன்பங்களிலிருந்து மீள எந்தப் பரிகாரம் செய்தாலும் உங்களுக்கு விமோசனம் கிடைக்காது என்பது விதி!!!

இந்த மூன்று பாவங்களை செய்பவர்களுக்கு, இந்த பாவங்களுக்கான தண்டனையிலிருந்து தப்பிக்க, எந்த மாதிரியான முயற்சிகள் நீங்கள் செய்தாலும், அதில் தோல்வி தான் கிடைக்கும்.

கோவில் கோவிலாக சென்றாலும் கூட எந்த தெய்வமும் உங்களுக்கு உதவி செய்யாது.

ஆன்மிகமலர் .காம்

e-magazine
aanmeegamalar.com

## அறியவேண்டிய ஆன்மிகத் துணுக்குகள்

- ரத்தினம் வேண்டிய ஒரு அரசனை இறைவன் சோதித்தபோது அவனுடைய வாளால் வெட்டப்பட்ட லிங்கத் திருமேனியை ரத்தினகிரியில் காணலாம். இங்கு சிவபெருமான் ரத்தினகிரீஸ்வரர் என்ற பெயருடன் காட்சி தருகிறார்.
- தலைச்சங்காட்டில் திருமால், சிவபெருமானை வழிபட்டு, பாஞ்சஜன்ய சங்கைப் பெற்றதால் அங்கு சங்கு வடிவில் மூலவராகக் காட்சியளிக்கிறார் ஈசன். இறைவனுடைய பெயர் சங்காரண்யேஸ்வரர்.
- கேரள மாநிலம் திருச்சூரில் வடக்குநாதர் சுவாமி கோயிலில் சிவன் நெய் மலையாக காட்சி தருகிறார். ஆதிசங்கரர் பிரதிஷ்டை செய்த லிங்கம் இது.
- அமர்நாத்தில் உள்ள பனிலிங்கம் சந்திரனைப்போலவே 15 நாளில் வளர்ந்து பௌர்ணமியில் முழு லிங்கமாகவும் அடுத்த 15 நாளில் தேய்ந்து அமாவாசையில் மறைவதும் சிறப்பம்சம்.
- கரூர் பசுபதீஸ்வரர் கோயிலில் சிவலிங்கம் வடதுபுறம் சாய்ந்திருப்பதைக் காணலாம்.



கட்டாய சந்தா இல்லை!

சப்ஸ்கிரைப் இல்லை!!

மாற்று மத திணிப்பு இல்லை!!!

தரம் மட்டுமே
நமது இதழின் தாரகமந்திரம்,
வியாபார நோக்கத்துடன் செயல்படும்
மற்ற ஆன்மிக இதழுக்கிடையே
சேவையை மட்டுமே நோக்கமாக
கொண்ட ஒரே தரமான
ஆன்மிக இதழ்

**ஆன்மிகமலர்.காம் வழங்கும்**
**ஆன்மிகமலர் மெயில் புத்தகம்**

ஒரே கிளிக் **176** இதழ்களையும்
டவுன்லோடு செய்து படியுங்கள்

மேலும் விபரங்களுக்கு
aanmeegamalar.com இணையதளத்தை பாருங்கள்












e-magazine
aanmeegamalar.com

# வெகு சிறப்பாக நடைபெற்ற பாதாளலிங்க திருக்கோயில் கும்பாபிஷேகம்

ஈரோடு அருகே அறச்சலூர் வீரபம்பபாளையத்தில் ஸ்ரீ கிருஷ்ணதுளசி கோ சாலையில் ஸ்ரீ பாதாளலிங்க திருக்கோயில் கும்பாபிஷேகம் திருப்பணிகள் முடிக்கப்பட்டு கடந்த 9-ந்தேதி மகாகும்பாபிஷேகவிழா நடைபெற்று தினந்தோறும் மண்டல பூஜை நடைபெற்று வருகிறது.

இங்கு உள்ள கோசாலையில்70 க்கும் மேற்பட்ட பசுக்களும் ஏராளமான வயதான






பசுக்களும் பராமரிக்கப்படு தினசரி கோபூஜைகள் நடைபெற்று வருகிறது.

இங்கு உள்ள பாதலிங்க கோவிலில் பா தளம் வழியாக சென்று நர்மதை நதியில் கிடைக்க பெற்று இங்கு பிரதிஷ்டை செய்யப்பட்ட

பாணலிங்கம் எனப்படும் பசுபதிநாதரை வழிபடலாம். அதைதொடர்ந்து காலபைரவர் முருகன் மற்றும் நாராயண பெருமாள் கோவிலை பக்தர்கள் தரிசனம் செய்யலாம்.

பாதாளலிங்க திருக்கோவில் கும்பாபிஷேக மண்டல பூஜையானது வரும் 21.06.2024 வெள்ளிக்கிழமை அன்று மாலை 4.30 மணி அளவில் ஹோமம், சங்காபிஷேகம், வழிபாடு என 12 நாட்களோடு நிறைவு பெறுகிறது.

அது சமயம் அன்பர்கள் மேற்படி நாளில் மேற்படி பூஜையில் கலந்து கொண்டு திருவருளும் குரு அருளும் பெற்று சகல மேன்மைகளையும் பெற வேண்டுகிறோம்.

ஸ்ரீ கிருஷ்ணதுளசி கோசாலை, செல்ல ஈரோடு பஸ் நிலையத்தில் இருந்து பழனி தாரா புரம் செல்லும் பஸ்களில் எளிதாக சென்று அறச்சலூர் வீரப்பம்பாளையம் செல்லலாம்.


அழகுராஜா

கோசாலை பசுபதி நாதர் கோவில் செல்ல இந்த செல் எண்களை அனுகலாம். கிருஷ்ண சமிதி கோசாலை நிறுவ னர் விஜயபூபதி 87786 72056,95240 24983.

– முதன்மை செய்தியாளர்

அழகுராஜா
9994162182

# தீர் தாம் மந்திர்



டார்ஜிலிங், மேற்கு வங்கத்தில் உள்ள அழ கிய மலை வாசஸ்தலம். இயற்கை அழகும், அமைதியும் நிறைந்த இந்த பகுதியில் ரயில் நிலையம் அருகே அமைந்துள்ளது “தீர் தாம் மந்திர்” 1939–ஆம் வருடம் ராஜஶிசாஹேப் புராண பகதூர் பிரதான் என்பவரால் இக்கோவில் கட்டபட்டது. நேபாளின் தலை நகரமான காட்மண்டுவில் உள்ள “பசுபதிநாத்” கோவிலை போல அமைப்புள்ளது. கோவிலின் முன் உள்ள சிவனின் திருஉருவம் ஐந்து முகங்களுடனும், நெற்றிகண்ணுடன் அமைந்துள்ளது.

கோவிலின் உள்ளே அம்பிகை, ராதா கண் ணன், சிவபார்வதி சன்னதிகளும் உள்ளன. அமைதியான கோவில் தரிசனம் முடித்து, இங்கிருந்து மேகமூட்டம் சூழ்ந்த டார்ஜிலிங் மலை அழகை ரசிப்பது தனி அனுபவமாகும்.

– ஆர்.சுபத்ரா ரங்கநாதன்
Hyderabad-500 036. Telengana



e-magazine
aanmeegamalar.com

ஆன்மிகத் தகவல்களை

எளிமையாக, பாமரர்களும் புரிந்து கொள்ளும் வகையில்

ஆன்மிகமலர் மெயில் புத்தகத்தில் (e-book) வெளியிட்டு வருகிறோம்...

eBook DOWNLOAD free

இதுவரை வெளிவந்த

173 க்கும் மேற்பட்ட இதழ்களை




**aanmeegamalar.com**

இணையதளத்தில் இலவசமாக படிக்கலாம்.







e-magazine
aanmeegamalar.com

# விமரிசையாக நடைபெற்ற பேச்சியம்மன் சேம்பர் ஸ்ரீ கற்பக விநாயர் ஆலய கும்பாபிஷேகம்

சிவகங்கை மாவட்டம் மானாமதுரை மதுரை ராமேசுவரம் நான்கு வழி சாலை முத்தனேந்தல் அருகில் உள்ள ஸ்ரீ பேச்சிஅம்மன் சேம்பர்பிரிக்ஸ் உள்ளது.

இவ்வளாகத்தில் கன்னி மூலையில் வேண்டிய வரம் தரும் ஸ்ரீ கற்பக விநாயகர் கோவில் திருப்பணிகள் முடிக்கப்பட்டு மகா கும்பாபிஷே கம் 9–ந்தேதி ஞாயிற்றுக்கிழமை காலை 7மணிக்கு நான்காம் காலபூஜையுடன் தொடங்கியது.

அதை தொடர்ந்து சிவாசாரி யார்கள் யாக சலையில் வைத்து பூஜை செய்த புனிதநீர் குடங்களை கோவில் வலம் வந்து கோவில் விமான கோபுரத்தில் உள்ள கும்ப கல சத்திற்க்கு அபிஷேகம் செய்தனர்.



அதைதொடர்ந்து மூலவர் கற்பக விநாயகருக்கு மகா அபிஷேகம் சிறப்பு பூஜைகள் நடைபெற்றது. முன்னதாக கும்பாபிஷேகம் மற்றும் யாகசாலை பூஜைகளை பிள்ளையார் பட்டி பிச்சை குருக்கள் சுவாமி செய்து இருந்தார்.

விழாவிற்க்கு வருகை தரும் பக்தர்களுக்கு சிறப்பு அன்னதானம் செய்யப்பட்டது. முத்தனேந் தல் மதுரை மானாமதுரை சிவகங்கை மற்றும் சுற்றியுள்ள கிராமங்களில் இருந்து ஏராளமான பக்தர்கள் கும்பாபிஷேக விழாவில் கலந்து கொண்டு சுவாமி தரிசனம் செய்தனர். மகா கும்பாபிஷேகவிழா ஏற்பாடுகளை பேச்சிஅம்மன் சேம்பர் பிரிக்ஸ் உரிமையாளர் மதுரை கிடாக்குழி எம்.கந்தசாமி செய்து இருந்தார். தொடர்ந்து மண்டல பூஜை மற்றும் சங்கடஹர சதுர்த்தி பூஜை நடை பெற்று வருகிறது.

– முதன்மை செய்தியாளர்
அழகுராஜா




e-magazine
aanmeegamalar.com

# வெளிநாட்டு வேலை கிடைக்க அருள்தரும் திருமால்பாடி ரங்கநாதர்

அர்ச்சாரூபராய் பார்முழுதும் அருள்புரிந்துவரும் திருவரங்கன் திருமால்பாடி என்னுமிடத்தில் குளிர்ந்த ஏரிக்கரையின் மீது அமைந்த குன்றில், அனந்த சயன கோலத்தில் அடியார்களின் குறை களைந்திட அதியற்புதமாக அருளாட்சி நடத்து கின்றார்.

பள்ளி கொண்ட கோலத்தில் அந்த பரந்தாமன் இங்கு எழுந்தருள காரணம் என்ன என்பதனைக் காண்போமா???

ஸ்ரீ வேதவியாசரின் மகனான, கிளி முகம் கொண்ட சுகப்பிரம்ம ரிஷி இப்பகுதி யில் வரும்போது விரஜாபுரி என்னும் {ஸ்ரீவைகுண்டத் தில் பிரவாகிக்கும் புண்ணிய நதியின் பெயர் விரஜை} திருமால்பாடி குன்றின்மீது திருமாலை நோக்கி தவமிருந்தார். தவத்திற்கு இரங்கிய திருமால் தேவர்களுடன் கூடிய அரங்கநாதனாக தரிசனம் தந்து, வேண்டிய வரம் கேட்டார். சுகர் தனக்கு முக்திபேறு வேண்டினார். அதற்கு





e-magazi
aanmeegamalar.com

அரங்கநாதரோ... அருகில் உள்ள தீர்க்காசலம் என்னும் நெடுமலையில் தவம் புரியும்படியும், இராம அவதாரத்தின் போது இளவல் லட்சுமணன், அன்னை சீதாபிராட்டி மற்றும் அனுமன் புடைசூழ காட்சி தந்து முத்திப்பேறு தருவதாக வாக்களித்து மறைந்தார்.

அதன்படி இக்குன்றில் தவத்தை முடித்து, அரங்கனின் கட்டளைப்படி நெடுமலையை அடைந்து, அங்கு மீண்டும் திருமாலைக் குறித்து தவமிருந்தார். பின்னர் ஸ்ரீ இராமச்சந்திர பிரபுவைக் கண்டு, வணங்கி, முக்தி நிலையை எய்தினார் சுகப்பிரம்ம ரிஷி.

இந்த புராண பின்னணியை மனதில் கொண்டு கி.பி.1136 ஆம் ஆண்டு பராந்தக சோழனின் மகன் விக்கிரம சோழனால் இக்குன்றில் அரங்க நாதருக்கு ஆலயம் எழுப்பப்பட்டது. அதுமுதல் அடியார்களின் குறைகளை நீக்கி அற்புதமாக அருள்பாலித்து வருகின்றார் ஸ்ரீ ரங்கநாயகி








சமேத ஸ்ரீ ரங்கநாத பெருமாள்.

குளிர்ந்த ஏரி நீரில் பட்டு வீசும் தென்றலும், பூஞ்சோலைகளும் பசுமையான வயல்வெளிகளும் சூழ... அற்புதமான சிறு குன்றின் மீது கோவில் கொண்டுள்ளார் ஸ்ரீ ரங்கநாத பெருமாள். 108 திவ்ய தேசங்களை நினைவூட்டும் 108 படிகள் கடந்து மேலே செல்ல, முதலில் மேற்குப்புறமாக வசந்த மண்டபம் காணப்படுகின்றது. அடுத்ததாக, மூன்று நிலைகளும் ஏழு கலசங்களும் கொண்ட இராஜகோபுரம் நம்மை வரவேற்கிறது. முன் மண்டபத்தின் இருபுறமும் கருங்கல் திண் ணைகள். உள்ளே... மகா மண்டபத்தில் நேராக தென்திசையை பார்த்தபடி ஸ்ரீ வீர ஆஞ்சநேயர் தரிசனமளிக்கின்றார்.

சற்று இடதுபுறம் திரும்பிட.... ஸ்ரீ ரங்கநாயகி தாயார் அலங்கார ரூபத்தில், சர்வ மங்களங்களையும் அருளும் கடாக்ஷியாக, திருவருள் பொழிகின்றாள். அருகில் ஸ்ரீ நரசிம்மரது தரிசனம்.

மகாமண்டபம் கடந்து, பெரிய அந்தராளத்தை அடைந்து, எழில் சுரக்கும் ஸ்ரீரங்கநாதப் பெருமா ளை கண்குளிரக் கண்டு வணங்கு கின்றோம். 15 அடி நீளமுள்ள ஐந்து தலைகள் கொண்ட ஆதிசேஷன் மீது மரக் காலை தலைக்கு வைத்தபடி, அனந்த சயனத்தில் பெருமாள் படுத்திருக்க..... தலைமாட்டில் ஸ்ரீதேவியும், கால்மாட்டில் பூதேவியும் அமர்ந்து, அரங்கனுக்கு சேவை புரிந்திட, திருப் பாதங்களின் அருகே பிரகலாதனும், சுகபிரம்ம ரிஷியும் தவம் கிடக்க....

பரந்தாமனின் திருமுகமோ பக்தர்களை பார்த்த படியிருக்க... இந்த பூலோக வைகுண்டத்தின் அழகு, அடடா... அடடா... வார்த்தைகளால் வர்ணிக்க முடியவில்லை. நேரில் வந்து தரி சித்தால்தான் இந்த பேரானந்தம் புரியவரும்.

தலைக்கு கீழே இரண்டு விரல்களையும் உள்ளே மடக்கி, மூன்று விரல்களை வெளியில் காட்டியபடி, யான் மூவுலகங்களையும் அளந்தவன் என சுட்டிக் காட்டுகின்றார். இவரது பார்வையோ, பக்தர்களைப் பார்க்கும்வண்ணம் உள்ளது வெகு விசேடமாகும். பக்தர்களின் குறைகளை தனது நயனத்தினாலேயே தீர்த் தருளும் திறத்தை நிரூபிக்கிறார்.

இவருக்கு முன்னே... உற்சவ மூர்த்தங்களாக ஸ்ரீதேவி, பூதேவி யுடனான சங்கு சக்கரம் ஏந் திய ஸ்ரீமஹாவிஷ்ணு சேவை சாதிக் கின்றார்.

அரங்கனின் அதியற்புத தரிசனம் முடித்து, ஆலய வலம் வருகையில் ஆண்டாளை தரிசிக்கின்றோம்.



மோ.கணேஷ்

e-magazine
aanmeegamalar.com
ஆன்மிகமலர்



1529 இல் வீரசிங்கதேவரின் மகனான அச்சுத தேவமகாராயர் ஆகியோரால் திருப்பணிகள் செய்யப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

வைகுண்ட ஏகாதசி உள்ளிட்ட அநேக வைஷ்ணவ சம்பிரதாயங்களும் இங்கு விசேடமாக அனுசரிக்கப்படுகின்றன.

திருமண பாக்கியம் மற்றும் குழந்தைப்பேறு வேண்டுவோர் இங்கு அரங்கனுக்குத் திருமஞ் சனம் செய்வித்து, நற்பலன் அடைகின்றனர்.

அரசு வேலை மற்றும் வேலையில் இடமாற்றம் வேண்டுவோர் பலர் இங்கு வழிபட்டு பலன் அடைந்துள்ளனர். அயல்நாட்டு வேலை வாய்ப் பும் இவ்வரங்கனின் அருளால் பலருக்கும் கிடைத்துள்ளது.

திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசி வட்டத்தில் உள்ள இந்த திருமால்பாடி திருத் தலம், செஞ்சி சேத்பட் பேருந்து சாலையில் உள்ள வளத்தியில் இருந்து தேசூர் செல்லும் வழியில் அருந்தோடு கிராமத்திற்கு அருகே அமைந்துள்ளது.

ஒரு முறை வந்து அரங்கனை கண்டு, சேவித்து, அளவில்லா ஆனந்தம் அடைவோம். நம் கொடுவினைகள் களைந்து, ஆனந்தம் பெறு வோம்.

பழங்காமூர் மோ.கணேஷ்
தொடர்புக்கு: 9789156179

# தாமரை வடிவ ஆவுடையாரில் லிங்கம்

- அர்ஜுனனின் அம்புபட்ட லிங்கத்தை திருவிஜயமங்கையில் தரிசிக்கலாம். இங்கு இறைவன் விஜயநாதேஸ்வரர் என்ற திருநாமத்துடன் அருள்பாலிக்கிறார்.
- செம்பனார்கோயிலில் உள்ள சிவபெருமான் சொர்ணபுரீஸ்வரர் என்ற பெயருடன் 32 இதழ்களை உடைய தாமரை வடிவ ஆவுடையாரில் சுயம்பு லிங்கமாக எழுந்தருளியிருக்கிறார்.
- காஞ்சிபுரத்தில் உள்ள கைலாசநாதர் ஆலயத்தில் சிவன் எட்டுக்கைகளுடன் சிற்பமாகக் காட்சியளிக்கிறார்.
- மகாராஷ்டிரா மாநிலம் எல்லோரோ குகைகளுக்கு அடுத்து உள்ள "குஸ்மேசம்' என்னும் ஊரில் உள்ள சிவலிங்கம் குங்குமத்தால் ஆனது.
- பொதுவாக பெருமாள் கோயிலில்தான் சடாரி வைப்பார்கள். ஆனால் மூன்று சிவன் கோயில்களில் மட்டும் சடாரி வைக்கப்படுகிறது. அவை காஞ் சிபுரத்தில் உள்ள ஏகாம்பரேஸ்வரர் கோயில், காளஹஸ்தி கோயில், மற்றும் சுருட்டப்பள்ளி சிவன் கோயில் ஆகும்.
- திருவக்கரை வக்கிரகாளியம்மன் கோயிலில் உள்ள சிவபெருமானது பெயர் சந்திரமௌலீஸ்வரர். அவர் மும்முகலிங்கமாக தரிசனம் அளிக்கிறார். அதில் கிழக்கு முகம் தத்புருஷ லிங்கம் என்றும், வடக்கு முகம் வாமதேவ முகமாகவும், தெற்கு முகம் அகோர மூர்த்தியாகவும் வணங்கப் படுகின்றனர்.



# நொய்டா கோவிலில் பிரதோஷ தினத்தில் நடைபெற்ற ருத்ர அபிஷேகம்







பிரதோஷத்தை முன்னிட்டு, ருத்ர அபிஷேகம் செக்டர் 62 நொய்டாவில் உள்ள ஸ்ரீ விநாயகா ஸ்ரீ கார்த்திகேய கோவிலில் நடந்தன. இதையொட்டி, சந்திரமௌலீஸ்வரர் மற்றும் திரிபுர சுந்தரி அம்மனுக்கு சிறப்பு அபிஷேகம் உட்பட, சிறப்பு அலங்காரமும் செய்யப்பட்டது. பக்தர்கள் சிவனை போற்றிய ஸ்லோகங்கள் மற்றும் பாடல்களை பாடினர். அனைத்து பூஜைகளையும் கோவில் வாத்தியார்கள் மணிகண்டன் சர்மா மற்றும் மோஹித் மிஸ்ரா நடத்தினர். மகா தீபாராதனை முடிந்து பக்தர்களுக்கு பிரசாதம் வழங்கப்பட்டது



எஸ்.வெங்கடேசன்

## நொய்டா முருகன் கோவில் வளாகத்தில் கடும் வெயிலுக்கு குளிர்பானம் வழங்கப்பட்டது

நிலவும் வெப்பத்தைப் பார்த்து, 'இனிப்பு நீர்', வேதிக் பிரச்சார் சன்ஸ்தான் நிர்வாகம், அதன்







செக்டார் 62, நொய்டா ஸ்ரீ விநாயகா மற்றும் ஸ்ரீ கார்த்திகேயா கோவில் வளாகத்திற்கு வெளியே மூவாயிரத்திற்கும் மேல் பொது மக்களுக்கு விநியோகிக்கப்பட்டது . இந்த இனிப்பு நீரில், 750 லிட்டர் பிஸ்லேரி தண்ணீர்,

24 லிட்டர் ரூவ்ஆசா (Rooffza) சிரப், 50 கிலோ வெள்ளை சர்க்கரை, 30 லிட்டர் டோன்ட் பால், மற்றும் 200 கிலோ ஐஸ் ஆகியவையால் கலக்கப்பட்டன.

வடக்கில் பொதுவாகவே அழைக்கப்படும் 'சபீல்', இது பொதுவாக மே மற்றும் ஜூன் மாதங்களில் டெல்லி மற்றும் அண்டை பகுதிகளில் வெப்பநிலை 45 டிகிரியை கடக்கும் இடங்களில் விநியோகிக்கப்படுகிறது. குழு உறுப்பினர்கள்: ஸ்ரீதர் ஐயர், ராஜு அய்யர், பாலாஜி, ராமசேஷன், வெங்கட்ராமன் அர்ஜுன், கோயில் வாத்தியார்கள் : மணிகண்டன் மற்றும் மோஹித் மிஸ்ரா, ஒரு குழுவாக சேர்ந்து பெரிய ட்ரம்மில், இனிப்பு தண்ணீரை கலக்கும் பொறுப்பை ஏற்றுக்கொண்டனர். இதில் பராமரிப்பு ஊழியர்களும் முக்கிய பங்கு வகித்தனர்.

– எஸ்.வெங்கடேசன், நொய்டா
தொடர்பு எண்: 9811161370

## மூன்று தலையுடன் கூடிய அர்த்த நாரீஸ்வரர்

- பெங்களூருக்கு அருகே சிவகெங்கா என்ற இடத்தில் சிவலிங்கத்தின் மேல் நெய்யை வைத்தால் வெண்ணெயாக மாறுகிறது. இந்த வெண்ணெயை வீட்டுக்குக் கொண்டு வரலாம். எத்தனை நாள் ஆனாலும் வெண்ணெய் உருகுவதில்லை.
- தாராசுரத்தில் உள்ள ஐராவதேஸ்வரர் கோயிலில் உள்ள ராஜகம்பீர மண்டபத்தில் மூன்று தலையுடன் கூடிய அர்த்த நாரீஸ்வரர் இருக்கிறார்.



- ஐந்துமுகம் கொண்ட சிவபெருமான் ஏழு தலங்களில் அருள்புரிகிறார். 1.காசி, 2. நேபாளம், 3. காளஹஸ்தி, 4. திருவானைக்காவல், 5. சித்தேஸ்வர் மகாதேவ், 6. ராசிபுரம், 7. காஞ்சி கைலாசநாதர் கோயில்.
- தஞ்சை மாவட்டம் குடவாசல் அருகே உள் ளது நாலூர் திருமயானம். இங்கு உள்ள சுயம்பு லிங்கத்தின் மேற்பகுதி பலாபழம் போன்று முள்ளு முள்ளாக உள்ளது. சுவாமியின் பெயர் பிலாச வனேஸ்வரர்.

# ஆன்மிக சேவையை பாராட்டலாம் வாங்க...

பஜன்மண்டலியினர்,

ஆன்மிக சேவை செய்யும் அன்பர்கள்,

ஆன்மிக அமைப்புகள், உழவாரப்பணி,

கோவில் திருவிழாக்களில் சேவையாற்றும் அன்பர்கள்,

அன்னதானம் செய்பவர்கள்,

பல்வேறு ஆன்மிகபணி செய்யும் ஆன்மிக அன்பர்கள்

மேற்கண்ட ஆன்மிக பணியை விரும்பி செய்யும் அன்பர்கள் தங்களைப் பற்றியும், தங்களது சேவையைப் பற்றியும் எங்களுக்கு தெரியப்படுத்தவும், தாங்கள் செய்யும் சேவையை புகைப்படத்துடன் மற்றவர்களுக்கு தெரியப்படுத்துவோம்,

உங்களுடன் இணைந்து பணிசெய்ய விரும்பும் அன்பர்களுக்கு நமது ஆன்மிகமலர்.காம் இணையதளமும், இணையதள இதழும் பாலமாக செயல்படும்,

கீழ்காணும் வாட்சப் எண்ணிற்கு தெரியப்படுத்தவும், அல்லது தொடர்பு கொள்ளவும்.

வாட்சப் எண்: 9444228203

# விக்கிரக தரிசனத்தில் கிடைப்பது ஆத்ம தரிசனம்

சீடன்: ஹிந்து மதம் சொல்வது என்ன?

ஞானி: அறியாமை என்பதுதான் அறிவு ஆகிறது என்பதே ஹிந்து மதம்.

சீடன்: ஹிந்து மதத்தை புரிந்து கொண்டால்?

ஞானி: ஆன்மீகவாதியாகவோ சிந்தனையாளனாகவோ ஆவாய்.

சீடன்: சுத்தமான பக்கம் எது?

ஞானி: உள்பக்கத்தில் யார் இருக்கிறார்கள் என்பதை தெரிந்து கொள்வது.

சீடன்: தியானம் என்றால் என்ன?

ஞானி: அசாந்தியைப் போக்கி சாந்தியைக் கொண்டு வருவது.

சீடன்: வழிபாடு எப்பொழுது எளிதாகிறது?

ஞானி: தெரிந்து கொண்டு செய்வது.

சீடன்: உலக சட்டம் கடவுள் சட்டம்?

ஞானி: சட்டத்தை மீறி காரியங்களை நடத்தி அதனால் துன்பப் பட்டால்தான் நீங்கள் சட்டத்தை மீறினவர்கள் ஆவீர்கள். ஞானிகளும், மகான்களும் என்றும் சமுதாயத்தை எதிர்ப்பதற்காக எதிர்த்த வர்கள் அல்ல. கடவுளை, கடவுளின் சட்டத்தை ஆதரித்தவர்கள்.

சீடன்: இம்மாதிரியான பக்தி எப்பொழுதுவரும்?

ஞானி: பக்தி இருக்கிறதா, இல்லையா என்பது சாப்பிட்டவனுக்கும். சாப்பிடாமல் பசி உள்ளவனுக்கும் உள்ள வித்தியாசம் போல். உடனே தெரிந்தால் இலாபம்.

சீடன்: சில தெய்வங்கள் கோர வடிவமாக உள்ளதே?

ஞானி: யார் சொன்னது? நரசிம்மரின் கோரப்பல் தான் உனக்கு தெரிகிறது. பக்தனுக்கு அதில் இருக்கும் சிரிப்பும், அன்பும், அருளும் தெரிகிறது.



சீடன்: பார்க்க காதுகள், உங்கள் விளக்கம் நன்றாக உள்ளது சுவாமி?

ஞானி: ஒன்றைச் சொல்லி இன்னொன்றைப் பற்றி விளக்குவது சாதாரண வாழ்க் கையில் ஏமாற்றுவது போல் இருக்கும். ஆனால் பக்தி மார்க்கத்தில் அது சகஜம். புரிந்து கொள்ள பணிவு வேண்டும்.

சீடன்: கடவுளைப் பார்க்க வேறு உதவிகள்?

ஞானி: கடவுளைப் பார்க்க இரண்டு தொழில்கள் உள்ளது. ஒன்று உடல், கண், காது என்ற வெளித்தொழிற்சாலை. இரண்டாவதாக மனது என்ற உட்தொழிற்பட்டறை.

சீடன்: இதை உபயோகித்தால் பக்தர்கள் ஆகி றார்களா?

ஞானி: கர்மேந்திரியத்தின் முழு உபயோகத்தை அறிந்தவர்கள் பக்தர்கள் ஆவார்கள்.

சீடன்: இந்த உதவிகளால் அனைவருக்கும் இலாபம் தானே?

ஞானி: ஆமாம். ஆனால் உதவியைப் பெற்று கொண்ட மனிதன் பயத்தை விடுதல் வேண்டும். அப்பொழுது தான் அவன் உதவியை உபயோகித்துக் கொண்டான் என்று அர்த்தம்.

சீடன்: இது விக்கிரக தரிசனத்திலும் கிடைக் கும் அல்லவா?


ஞானி: உண்மை. விக்கிரக தரிசனத்தில் கிடைப்பது ஆத்ம தரிசனம்.

சீடன்: எங்களைப் போன்ற சாதாரண மனிதர்களைப் பார்ப்பதில் ஞானிகள் அடைவது என்ன?

ஞானி: வருகின்ற மக்களின் திருப்தியைப் பார்ப்பவன் மஹான். அதில், அந்தத் தொண்டில் திருப்தி அடைகிறான்.

சீடன்:மனிதனின் நிலை என்ன?

e-magazine
aanmeegamalar.com
ஆன்மிகமலர் .காம்
ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!!




ஆசிரியர், வெளியீட்டாளர்
**N.P.சந்திரன்**
**C.V. நடராஜன்**
செல்: 9444228203
♦♦♦
முதன்மை செய்தியாளர்:
அழகுராஜா
செல்: 9994323622
♦♦♦
துணை ஆசிரியர்கள்
ஷியாம்சுந்தர்,
ஸ்ரீபதி, ஸ்ரீவர்ஷினி, சாய்,
குருபிரியா
வேல்
♦♦♦
வடிவமைப்பு
SML கிராபிக்ஸ்
செல்: 9444228203

நிர்வாக அலுவலகம்
**aanmeegamalar.com**
நெ.16/18, பாரதீஸ்வரர் காலனி, 4வது தெரு,
கோடம்பாக்கம், சென்னை 600024.



## ஆசிரியர் குழுவில் இணையலாம்

**ஆன்மிகமலர்.காம் இதழில் இணைந்து செயல்பட விரும்புகிறீர்களா?... ஆன்மிகம் சம்பந்தப்பட்ட செய்திகளை எழுத ஆர்வமுள்ளவர்கள் தொடர்பு கொள்ளுங்கள்.**

தொடர்பு கொள்ளவும்
**9444228203**



e-magazine
aanmeegamalar.com


**ஞானி:** மனிதன் தன் அதிருப்தியை வெளிப்படுத்துகிறான். அது அவனிடமே, அடுத்தவரிடம் இருந்து திரும்பி வருகிறது. திருப்தியை மனிதன் சந்திக்கும்பொழுதே ஞானியாகிறான்.

**சீடன்:** அந்த சூழ்நிலை அமைதியாக இருக்குமல்லவா?

**ஞானி:** அது தான் இயற்கையான சூழ்நிலை மனித குலத்திற்கு. கடவுள் அருளால் கிடைப்பதால் அமைதிகிட்டும்.

**சீடன்:** மெய்யன்பர்களுக்கும், ஞானிகளுக்குமிடையே ஒரு இடைவெளி காணப்படுகிறதே?

**ஞானி:** ஆம் அந்த இடைவெளி தான் கடவுள். பக்தி செய்! நானும், நீயும் ஒரே இடத்தில் இருக்கலாம்.

**சீடன்:** உங்கள் சன்னதியிலேயே இது எளியவனுக்கு கிட்டுமா?

**ஞானி:** அது உன்னிடம் அல்லவா உள்ளது. பரிணாமவளர்ச்சியில் எங்கே நின்றால் பக்தனாவோம் என்பதைகுருவின் சன்னதி யில் உணருகிறாய். ஆண்டவனின் திருநாமம் இதற்கு உதவுகிறது. பக்திசெய், பலன்கிட்டும்.

**சீடன்:** என்னை நினைவில் வைத்துக் கொள்வீர்களா?

**ஞானி:** நினைவில் எப்பொழுதும் நம்மை வைத்துக் கொள்பவர்களிடம் நமக்கு அன்பு உண்டாகிறது. ஞானிகளும், கடவுளும் உண்மையான தொண்டனை, பக்தனை மறப்பதில்லை.

**சீடன்:** வளரும் மனிதன் எப்படி இருக்க வேண்டும்?

**ஞானி:** பேசாமல் இருப்பதற்கு ஒரு வாய்ப்பு கிடைத்துள்ளதே என்று எண்ணுபவனே வளரும் மனிதன்.

**சீடன்:** துன்பங்கள் ஏன் பிறந்தன?

**ஞானி:** ஆன்மீக இறக்கைகள் வளராததால்.

**சீடன்:** பூஜைகளை நிறுத்தலாமா?

**ஞானி:** பயம் போய்விட்டால் நிறுத்து.

**சீடன்:** தொண்டன் என்றால் என்ன?

**ஞானி:** பிறருக்காக வாழ்வது.

**சீடன்:** வீரம் என்றால் என்ன?

**ஞானி:** யாரையும் எதையும் யாசிக்காத நிலை.

**சீடன்:** ஞானஸ்நானம் என்றால் என்ன?

**ஞானி:** நமக்கு தேவையானது எது என்று தெரியும் நேரம்.

**சீடன்:** உண்மையான மதவாதிகள் ஏன் இல்லை?

**ஞானி:** பிரச்சினைகளில் கௌரவம் குறுக்கிடுவதை அனுமதிப்பதால்.

**சீடன்:** மனிதத் தன்மை என்றால் என்ன?

**ஞானி:** எதிலும் நோக்கம் அதிகமாக இருப்பது.

ஞானச்சேரி ஞானிகள்
பூஜ்ய ஸ்ரீசத்குரு சதாசிவ பிரும்மேந்திரரின்
அருளுரையிலிருந்து தொகுத்தது மேலும் விபரங்களுக்கு
எஸ்.மகாதேவன், போன் 098410 28028

# கடவுளுக்கு பிடித்தவர்கள்

அயோத்தியில் ஒரு பிராமிணன் இருந்தார். அவர் ஒரு பெரிய சோம்பேறி. . சாப்பிடுவது தூங்குவது சாப்பிடுவது தவிர வேறு எந்த வேலையையும் செய்ய மாட்டார். நீ வீட்டில் எந்த வேலையும் செய்யாமல் இருக்கிறாய் எனவே நீ எங்காவது ஆசிரமத்தில் போய் சேர்ந்துகொள். என்று வீட்டில் கூறினார்.

அவனும் தேடி அலைந்து ஒரு ஆசிரமத்தில் குரு சிஷ்யர்கள் எல்லோரும் உடல் பருத்து இருப்பதை கவனித்தான்.. அங்கு உணவு நிறைய கிடைக்குமா என்று விசாரித்தான். பஜன் கேட்பதும் குருவின் சொற்பொழிவுகளை கேட்பதும் மட்டுமே வேலை. மூன்று நேரமும் சாப்பாடு நிறைய கிடைக்கும் என்று அறிந்து அந்த ஆசிரமத்தில். 15 நாட்கள் மிகவும் மூன்று வேலையும் சாப்பாடு கிடைக்க சந்தோஷமாகஇருந்தான்.

ஒரு நாள் சமையல் செய்பவர்களும் பஜனையில் சேர்ந்து கூடினார். அங்கே ஒருவரிடம் இன்று ஏன் சமையல் செய்யவில்லை என்று கேட்டான். அதற்கு அவர் இன்று ஏகாதசி சாப்பாடு இருக் காது என்றனர் சாப்பாடு கிடைக்காது என்று கேட்டதும் அவனுக்கு கோபம் வந்தது நீ எந்த ஆசிரம் சென்றாலும் இன்று சாப்பாடு கிடைக்காது என்றனர். குருவிடம் போய் என்னை கட்டாய படுத்தாதீர்கள் என்னால் சாப்பிடாமல் இருக்க முடியாது ஏகாதசி சாப்பிடாமல் இருந்தால் த்வாதசியை பார்க்க முடியாது நான் உயிருடன் இருக்க மாட்டேன் என்றான் இந்த ஆஸ்ரமத்தில் ஏகாதசி அன்று சாப்பாடு கிடையாது. நீ இங்கே இருந்து தேவையானவற்றை வாங்கி கொண்டு போய் அருகில் உள்ள மரத்தடியில் சமையல் செய்து சாப்பிடலாம். என்று குரு கூறினார் அவனும் அரிசி, பருப்பு எண்ணை போன்றவற்றை வாங்கி கொண்டான். குரு அவனிடம் நீ எதை செய்தாலும் பாகவுனுக்கு அர்ப்பணம் முதலில் செய்ய வேண்டும் என்றார். அவன் மிக வும் சிரமப்பட்டு ஏதோ சமையல் என்று ஒன்று செய்தார். அந்த உணவை அர்ப்பணிக்க பகவானை பாடல்களை பாடி அழைத்தார். பகவான் வராதது கண்டு எனக்கு தெரிந்த சாதா ரண சாப்பாடு தயார் செய்துள்ளேன் . நீங்கள் கோயில் ஆசிரம் என்று வேறு எந்த இடம் சென்றாலும் உங்களுக்கு இன்று ஏகாதசியாம் சாப்பாடு கிடைக்காது என்று கூறி அழைத்தார். பகவான் ராமர் மனம் இறங்கி சீதா தேவியுடன் சென்றார். அவன் வருத்தம் கலந்த வியப்புடன் நாம் ஒருவரை கூப்பிட்டால் இரண்டு பேர் வந்து விட்டார்களே என்று நினைத்தான். பகவானும் தேவியும் நன்றாக சாப்பிட்டு சென்றனர். எல்லா சாப்பாடையும் அவர்கள் சாப்பிட்டதால் அவனுக்கு அன்று ஏகாதசி ஆகி விட்டது.

பதினைந்து நாட்கள் கழிந்த பின் மீண்டும் ஏகாதசி வந்தது. அவன் குருவிடம் இரண்டு பகவான்கள் வந்து சாப்பிடுகின்றனர் எனவே சமையல் செய்ய தேவையான பொருட்களை அதிகமாக கேட்டான். குருவும் கேட்ட சமையல் பொருட்கள் கொடுக்க சாப்பாடு தயார் செய்து பகவானை அழைத்தான். இந்த முறை ராம், சீதா தன்னோடு லக்ஷ்மணரையும் அழைத்து வந்தார். இந்த மூன்று பேரையும் பார்த்ததும் அவன் இன்றும் நமக்கு ஏகாதசி தான். ராம், சீதா என்று ரெண்டு பேரை கூப்பிட்டால் மூன்று பேர் வந்து விட்டனர். அரை குறை மனதுடன் வாருங்கள் சாப்பிடுங்கள் என்று வர வேற்றான் . அந்த மூன்று பேரும் நன்றாக சாப்பிட்டு சென்றனர். பிறகு சாப்பாடு மீதி இல்லாமல் அன்றும் அவனுக்கு ஏகாதசி ஆகி விட்டது.

அடுத்து 15 நாட்கள் பின்னர் ஏகாதசி அன்று மீண்டும் குருவிடம் சென்று அதிக மளிகை சாமான்களை கேட்டு பெற்று வந்தான். சாப்பாடு தயார் செய்து வைத்து ராம், சீதா, லக்ஷ்மன் ஆகிய மூவரையம் பாட்டு பாடி அழைத்தான். இம்முறை அனுமனும் அவர்களுடன் வருவதை கண்டு திடிக்கிற்றான். என்னடா எது ஒருவரை கூப்பிட்டால் ரெண்டு பேர், ராம் சீதா என்று ரெண்டு பேரை கூப்பிட்டால் மூன்று பேர், ராம்,

e-magazine
aanmeegamalar.com

சீதா, லக்ஷ்மன் மூவரை கூப்பிட்டால் நான்கு பேர் வருகிறார்களே. என்று அவர்குளுக்கு சாப்பாடு பரிமாறி மீதம் இல்லாமல் அன்று அவனுக்கு ஏகாதசி ஆயிற்று இம்முறை அடுத்த ஏகாதசிக்கு எவ்வளவு பேர் வருவீர்கள் என்று சொல்லி விடுங்கள் என்றான். அதற்கு அவர்கள் சிரித்த முகத்துடன் புறப்புட்டு சென்றனர்.

அடுத்தாட் 15 நாட்கள் பின்னர் குருவிடம் எனக்கு எல்லா சாமான்களும் 10 கிலோ கொடுங்கள் என்றான். என்னடா இது இவன் ஏதாவது வியாபாரம் செய்கிறானா ஏகாதசிக்கு சாப்பிட சாமான்கள் கொடுத்தால் ஒவ்வொரு முறையும் அதிகமாக கேட்கிறானே என்று ஆச்சரியத்துடன் அவன் கேட்டதை கொடுத்தனர். குரு தன்னுடைய சிஷ்யர்களுடன் அவனை பின் தொடர்ந்து மளிகைபொருட்களை என்ன செய்கிறான் என்று ஆர்வமுடன் அறிய பின் தொடர்ந்து சென்றார். இம்முறை எல்லா பொருட்களையும் இறக்கி வைத்து சமையல் செய்யாமல் இருந்தான்.

ராம், சீதா, லக்ஷ்மன், ஆஞ்சநேயரை சாப்பிட வரவேற்று அன்புடன் பாடல் பாடினான். இந்த முறை ராம்,சீதா,லக்ஷ்மன், ஹநுமானுடன் பரதன், சத்ருக்கனன், கைகேயி, சுமித்ரா எல்லோரும் வந்து விட்டனர் அந்த ப்ரமினாரிடம் எங்கே நெய்வேத்தியம் சாப்பாடு என்று கேட்டனர். அதற்கு அவர், ஆமாம் நான் சமைத்து வைப்பேன் நீங்கள் சாப்பிட்டுவிட்டு போய்விடுவீர்கள் எனக்கு எதுவும் மீறாது. இன்று ஏகாதசி. நான் சாப்பிடமாட்டேன். இங்கே தேவையான பொருட்கள் இருக்கிறது நீங்களே சமைத்து சாப்பிட்டு செல்லுங்கள் என்றார். எப்படியும் எனக்கு மீதி ஒன்றும் இல்லமால் ஏகாதசி தான் என்று கோபத்துடன் கூறி மரத்தின் அடியில் சென்று படுத்தான் . ராமரும் இதற்கு ஒப்புக்கொண்டு காய்கறிகளை நறுக்கினார் சீதா சமையலை துவங்கினால் லக்ஷ்மணர் விறகு வெட்ட, ஹனுமான் சிறு குச்சிகளை கொண்டு வர சுறுசுறுப்பாக சாப் பாடு செய்தனர். சீதாதேவி சமைப்பதை கண்டு தேவர்கள், ரிஷிகள் பூமிக்கு வந்து விட்டனர். அந்த இடமே விழாக்கோலம் பூண்டது .

அந்த சமயம் குரு தன்னுடைய சிஷ்யர்களுடன் அந்த ப்ராமினர் என்ன செய்கிறார் என்று பார்க்க வந்தனர். ஆனால் அந்த ப்ராமினர் மரத்தினடியில் படுத்திருக்கிறார். பொருட்கள் எல்லாம் அங்கே கிடக்கிறது என்பதை குருவிற்கு தெரிகிறது. குரு அவரிடம் சமையல் செய்யபோவதில்லையா என்றார். அதற்கு அவர் இங்கே இதோ இந்தனை பேர் சமையல் சமைப்பது உங்கள் கண்களுக்கு தெரியவில்லையா என்று கேட்டார்.

இதோ சீதா தேவி சமைத்து கொண்டு இருக்கிறார்களே . பாருங்கள் என்றார். ஆனால் குருவின் கண்களுக்கு எதுவும் தெரியவில்லை. குருவோ என் கண்களுக்கு எதுவும் தெரியவில்லையே என்றார்.உடனே இவர் கோபத்துடன் பகவானிடம் குரு தன்னை சந்தேகிப்பதால் அவர் கண்களுக்கும் தெரியப்போகிறீர்களா இல்லையா என்று கெஞ்சி கேட்டார்.உடனே பகவான் ராமர் அவர் கண்களுக்கு தெரியும்படி காட்சிதந்தார். குருவிற்கு மகிஸ்ச்சியில் கண்ணீர் வந்தது.எத்தனையோ ஆண்டுகளாக ஸ்ரீ ராமரை பூஜித்து நான் வந்தேன் என்னால் உன்னை காண முடியவில்லை. ஆனால் உன் எளிய மனோபாவம் அப்பாவித்தனம் பார்த்து கடவுள் நேரிலே வந்து விட்டார் என்று கூறி சிஷ்யரை அணைத்துகொண்டார்.

பகவான் நாம் எந்த அளவிற்கு எளிய மனோபாவத்துடன் அன்பு பிரியம் மரியாதை வைத்து இருக்கிறோம் என்று கணக்கிடுவார். பல விஷயங்கள், பூஜை, பாராயணங்கள் அறிந்தவர்களை, ஞானம் இருந்தால் மட்டும்தான் விரும்புவார் என்று நாம் நினைக்கலாம். ஆனால் எளிமையான மனதுடன் பாசத்துடன் நம்பிக்கை வைத்து பூஜிப்பவர்களை கடவுளுக்கு பிடிக்கும்.

(உபன்யாசத்தில் கேட்டது)

– ராணி கிருஷ்ணமூர்த்தி,
குரோம்பேட், சென்னை.



ஆன்மிகமலர்
ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!! .காம்

FREE

# 170 e-books

## 1000–க்கணக்கான ஆன்மிக செய்திகள்

முற்றிலும் இலவசம்
எந்தவித மறைமுக
கட்டணமும் இல்லை

பாருங்கள்... டவுன்லோடு
செய்து படியுங்கள்...

eBook FREEDOWNLOAD



aanmeegamalar.com



தொடர்பு எண்: 9444228203 mail:aanmeegamalar@gmail.com

# ஆன்மீக வழியில் அமைதி

கர்ம தத்துவம் என்பது மனித ஜன்மத்தில் அவன் அனுபவிக்கும் இன்ப துன்பங்களுக்கு அவன் செய்த பாவபுண்ணிய கர்மாக்கள்தான் காரணம். அவன் துன்பப்படுவதற்கு மற்றவர்களோ மற்ற உயிரினங்களோ காரணம் அல்ல என்று புரிந்து பொறுப்புடன் செயல்படுவதற்குத்தான் இந்த பாவ புண்ணியக் கர்மா பலன்கள் ஏற்பட்டது. நாம் அனுபவிக்கும் துன்பங்களுக்கு துயரங்களுக்கு மற்றவர்கள் மீது நாம் குற்றம் குறைகள் கூறிக்கொண்டு இருப்பதை தவிர்க்க வேண்டும். அவ்வாறு தவிர்க்கப் பழகினாலே நாம் மனதளவில் அமைதி அடைந்து விடுவோம். அதற்குமாறாக பிறர் மீது கோபப்பட்டுக்கொண்டு அவர்கள் மீது வீண்பழி கூறிக்கொண்டிருந்தால் நாம் மன அமைதியை இழந்து விடுவோம் என்பதையும் இந்த பாவ புண்ணியக் கர்மாக்கள் நமக்கு சுட்டிக் காட்டுகிறது.

சிலர் தான் அடையும் துன்பங்களுக்குக் காரணம் தான் வணங்கும் கடவுள்தான் என்று கடவுள் மீது சில நேரங்களில் பழி கூறுவார்கள். தினமும் பக்தியுடன் கோவிலுக்குப் போவதாகவும் அவ்வாறு கோவிலுக்கு பக்தியுடன் போய் கொண்டிருந்தும் தனக்கு துன்பம் வருகிறது. அதற்குக் காரணம் கடவுள்தான் என்று தவறாக எண்ணிக்கொண்டு இந்தக் கடவுளை வணங்கி என்ன பயன் என்று நினைத்து சிலர் கோவிலுக்குக்கூட போவதில்லை. இது மனிதர்களின் தவறான எண்ணங்களின் முடிவு ஆகும்.

நாம் நடந்து செல்லும்போது காலில் முள் தைத்து விட்டது என்று வைத்துக் கொள்வோம். முள் காலில் தைத்து விட்டது என்று முள் மீது உலக வழக்கில் பழி கூறுவது போன்றதுதான் கடவுள் மீது பழி போடுவது. முள்ளின் மீது நீதான் காலை வைத்தாய். ஆனால் முள் வந்து உன்னைத் தேடி வந்து குத்தியதுபோல் நாம் முள்ளின் மீது பழி கூறுகிறோம். கர்மா தத்துவம் நமக்கு வாழ்வின் பொறுப்புணர்வை உண்டாக்குகிறது. பிராரத்த கர்மா என்பது சஞ்சிதா கர்மாவின் குவியலில் இருந்து வெளிப்பட்ட ஒரு சிறுபகுதிதான் இந்த பிராரத்த கர்மா



79

e-magazine
aanmeegamalar.com

என்று சாஸ்திரம் கூறுகிறது. ஒரு மனிதன் அவன் பிறக்கும் சூழ்நிலை, அவன் தாய், தந்தை உற்றார் உறவினர் மகன், மகள் மனைவி போன்றவர்கள் அமையும் விதத்தை பிராரர்த்த கர்மாதான் தீர்மானிக்கிறது. எடுத்துக்காட்டாக ஒரு மனிதன் வாழும்போது உலகில் நன்றியில்லாமல் வாழ்வு முழுவதும் வாழ்கிறான் என்று வைத்துக் கொள்வோம். அவன் அடுத்த ஜென்மத்தில் நாயாகப் பிறந்து நன்றியைத் தீர்ப்பான்.

பிராரர்த்த கர்மா என்பது சஞ்சிதா கர்மாவின் ஒரு பகுதியாகும். அதாவது வில்லில் இருந்து அம்பு எய்தவுடன் புறப்பட்ட அந்த அம்புவின் நிலையை நம்மால் கட்டுப்படுத்தவோ நிறுத்தவோ முடியாது. அந்த அம்பு வில்லை விட்டு புறப்பட்ட பின் அந்த அம்புவின் வேகத்தையோ திசையையோ மாற்றுவதற்கு முடிவதில்லை. அந்த அம்பின் நிலை போன்றதுதான் பிராரர்த்த கர்மாவின் நிலையாகும். பிராரர்த்த கர்மா என்பது அஞ்ஞானிக்கும் மட்டும் அல்ல முற்றும் துறந்த ஞானிக்கும் உண்டு என்ற ஒரே நிலைதான் என்று சாஸ்திரம் கூறுகிறது.

பிராரர்த்த கர்மாவில் மனம், வாக்கு, செயல் மூன்றிலும் வரக்கூடிய துன்பங்களை அஞ்ஞானிகள் மனதளவில் உடலளவில் துன்பப்படுவார்கள் ஆனால் முற்றும் துறந்த ஞானிகள் பிராரர்த்த கர்மாவினால் வரக்கூடிய துன்பங்களை துயரங்களை தங்களது ஆழ்மனதிற்குள் கொண்டு செல்லமாட்டார்கள். அதனால் அவர்கள் அனுபவவிக்கும் துன்பங்களை ஒரு பொருட்டாக எண்ணிக்கொண்டு இருக்க மாட்டார்கள்.

அதாவது ஞானிகள் துன்பம் வந்தால் துவண்டு விட மாட்டார்கள். அதேபோல் அவர்கள் இன்பம் வந்தால் துள்ளிக் குதித்துக்கொண்டும் இருக்கமாட்டார்கள். அதாவது துன்பங்களையும் இன்பங்களையும் ஒரே மனநிலையில் இருந்து முற்றும் திறந்த ஞானிகள் அமைதியாக இருந்து எதிர்கொள்வார்கள். அதனால் ஞானிகளின் மனம் துன்பங்களால் பாதிப்பு அடைவதில்லை.

பாவ புண்ணியக் கர்மாக்கள் வந்தததால் கர்ம வினைக்குத் தக்க ஜென்மம் வந்தது. கர்மம் முதலில் வந்ததா? ஜென்மம் முதலில் வந்ததா என்ற கேள்விக்கு பதில் கூற முடியாது. மரம் முதலில் உண்டானதா? விதை முதலில் உண்டானதா? என்பதைப்போல் பதில் கூறுவதற்கு முடியாது. நமக்கு பொறுப்புணர்ச்சி மற்றும் தர்மத்தின் மீது ஒரு அசைக்க முடியாத நம்பிக்கை போன்றவற்றை கர்மா தத்துவம் நம்மை அறியாமல் நமக்கு நன்கு உணர்த்தும்.

பொதுவாக நம் அனைவருக்கும் கர்மாக்கள் சித்த சுத்தியும் கொடுக்கும். சிலபேர் நான் தினமும் கோவிலுக்கு போகிறேன். பிரார்த்தனை செய்கிறேன். ஆனாலும் துன்பமும் துயரமும் அனுபவிக்கிறேன். கோவிலுக்குப் போவதால் என்ன பயன் என்று புலம்பிக்கொண்டு இருப்பார்கள். கோவிலுக்குப் போவதால் உங்களுக்கு எதிர்பாராமல் வரக்கூடிய துன்பங்களை துயரங்களை எல்லாம் தாங்கக்கூடிய மன உறுதியை மன பக்குவத்தை உங்களையும் அறியாமல் அது கொடுக்கும் என்பதை அவர்கள் உணர்வதில்லை.

பொதுவாக நமக்கு வரக்கூடிய துன்பத்தின் சூழ்நிலை ஒன்றாக இருக்கும். அந்த துன்பங்கள் துயரங்கள் ஒவ்வொருவருக்கும் ஒரு மாதிரியாக இருக்கும் அல்லது மனதில் தோன்றும். எடுத்துக்காட்டாக இராமாயணத்தில் வரும் இராமன் கைகேகி கேட்ட இரண்டு வரங்களின்படி ஒன்று பதினான்கு ஆண்டுகள் வனவாசம் மேற்கொண்டான். இராமன் காட்டுக்குப் போவதைப்பற்றி அவன் துன்பமாக எண்ணவில்லை. வன வாசத்தில் ஞானியர் பலரை சந்திக்கும் வாய்ப்பாக அதனைக் கருதி இராமன் வனத்தில் ஏற்படும் துன்பங்களையும் துயரங்களையும் மகிழ்ச்சியுடன் ஏற்றுக்கொண்டான். இராமன் வனவாசம் சென்றதை நினைத்து கைகேகி, மந்தரை போன்றோர் மகிழ்ச்சி அடைந்தனர். அந்த மகிழ்ச்சி அவர்களுக்கு நெடுநாள் நீடிக்கவில்லை. பரதன் பட்டம் சூட்ட மறுத்தவுடன் கைகேகியும் மந்தரையும் துயரம் அடைந்தார்கள்.

இராமன் வனவாசம் சென்றதை நினைத்து நினைத்து பரதன் துயரம்



எழுத்தாளர்
பூ.சுப்ரமணியன்

e-magazine
aanmeegamalar.com

அடைந்தான். இராமன் வனவாசம் செல்வதற்கு தசரதன் காரணமாக இருந்தார் என்பதற்காக இலட்சுமணன் தந்தை தசரதன் மீதும் பரதன் மீதும் உண்மை நிலை அறியாமல் கோபப்பட்டான். கைகேகி கேட்ட வரத்தின்படி இராமன் வனவாசம் சென்றது என்ற சூழ்நிலை, நிகழ்வு என்பது ஒன்றுதான். அந்த நிகழ்வின் காரணமாக ஒவ்வொருவருக்கும் ஒவ்வொருவிதமான துன்பங்களை அனுபவவித்தார்கள். அதாவது அவர்கள் ஒவ்வொரு மனநிலையில் இருந்தார்கள். ஆனால் இராமன் முற்றும் திறந்த ஞானியைப்போல் தனக்கு வரக்கூடிய துன்பங்களையும் துயரங்களையும் இயல்பாக எடுத்துக்கொண்டான்.

ஆனால் இராமனின் தந்தை தசரதன் இராமன் பிரிவைத் தாங்கிக்கொள்ள முடியாமல் தனது ஜீவனைப் பிரிந்தான். அதேபோன்று துன்பங்கள் துயரங்கள் வரும்போது ஒவ்வொரு மனிதனும் வெவ்வேறு மனநிலையில் இருக்கிறார்கள். மனிதன் பிராா்த்த கா்மா பலன்களை அனுபவவிக்கும்போது மனம் பக்குவ நிலையில் இருந்தால் அவன் அடையும் துன்பங்கள் அவனுக்குத் துன்பமாக இருக்காது. பாவ புண்ணியக் கா்மாக்களை நன்கு புரிந்து மனம் ஆன்மீக வழியில் பக்குவநிலை அடையும்போது அவன் தேடும் விரும்பும் அமைதி கிடைக்கும்,.

பிராா்த்த கா்மா மூலம் வரக்கூடிய துன்பங்களை துயரங்களை எல்லாம் ஞானியானாலும் அஞ்ஞானியானாலும் அதனை அனுபவவித்துத்தான் தீர வேண்டும். அஞ்ஞானிகள் துன்பங்களைக் கண்டு துவண்டு விடுவான். சிலா் துன்பங்களைத் தாங்கிக்கொள்ள முடியாமல் தற்கொலைக்குகூட முயற்சி செய்வான். ஆனால் ஞானிகள் மலைபோல் துன்பம் வந்தாலும் அதனை பனிபோல் எண்ணி ஏற்றுக்கொள்ளும் மனபக்குவம் உடையவனாக இருப்பாா்கள் என்று சாஸ்திரம் கூறுகிறது.

பிராா்த்த கா்மம் எப்படித்தீரும் என்றால் துன்பங்களை அனுபவவிப்பதன் மூலம் தீரும். பிராா்த்த கா்மாவுக்கு ஒரு முடிவு உண்டு. ஆனால் சஞ்சிதா கா்மாவுக்கு ஆரம்பமும் முடிவும் இல்லை என்று சாஸ்திரம் கூறுகிறது. சஞ்சிதா கா்மா என்பது பாவ புண்ணியங்களின் குவியல் என்று சாஸ்திரம் கூறுகிறது. பிராா்த்த கா்மா பலனை மன பக்குவம் அடைவதன் மூலம் தீா்க்க முடியும். ஜீவன்கள் மனபக்குவம் அடைவதன் மூலம் கா்மா பலன்களால் வரக்கூடிய துன்பங்களால் பாதிப்புகள் ஏதும் ஜீவனுக்கு ஏற்படுவதில்லை. ஞானத்தால் மட்டும் எந்த ஒரு பாவ கா்மாவையும் முற்றிலும் அழிக்க முடியும் என்று சாஸ்திரம் கூறுகிறது. அவ்வாறு ஆன்மீக வழியில் சென்று பாவ கா்மாக்கள் நாசம் அடையும்போது நாம் விரும்பும் தேடும் அமைதி கிடைக்கும்.

– அமைதி தொடரும்


**எழுத்தாளா் பூ.சுப்ரமணியன்**
Tahsildar (Retd)
**கைபேசி:**
9894043308





**Owned, Published by CV.NATARAJAN. Design by SML.GRAPHICS, CHENNAI. Published from No.18, B.E. Colony, Kodambakkam, Chennai - 600 024.**
**Editor : CV.NATARAJAN, Cell: 9444228203.**
Website: www.aanmeegamalar.com / E-mail: aanmeegamalar@gmail.com

ஆன்மிகமலர் .காம்

ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!!

FREE

# 176 e-books

## 1000–க்கணக்கான ஆன்மிக செய்திகள்

முற்றிலும் இலவசம்
எந்தவித மறைமுக
கட்டணமும் இல்லை

பாருங்கள்... டவுன்லோடு
செய்து படியுங்கள்...




eBook FREE DOWNLOAD

## aanmeegamalar.com




தொடர்பு எண்: 9444228203 mail:aanmeegamalar@gmail.com